PROTONTECH




175, Main Street
Trincomalee
075 6602486

அறைவு 02 இயம் 41 June 07 - 13, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

## மீளக்குடியேறியோரின் கழிவுநீக்கல் விருத்திக்காக மேலும் 140 மில்லியன்

கிழக்கிலும் வடக்கிலும் மீளக் குடியமர்ந்தோரின் கழிவு நீக்கல் வசதிகளை மேம்படுத்துவதற்காக இரண்டாம் கட்டமாக 140 மில்லியன் ரூபாய்களை மீள்குடியேற்ற அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

மீளக்குடியேறிய மக்களில் இழிந்த வருமான மட்டத்திலுள்ள இரண்டாயிரத்து இருநூறு குடும்பங்களின் கழிவகற்றல்

13

# கிழக்கின் முதலமைச்சர் பதவி யாருக்கு?



கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்காது என்ற செய்தி கசிந்துள்ளது. முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டால் யாருக்கு வழங்குவது என்ற தீர்மானத்தால் கட்சிக்குள் ஏற்படப்போகும் பாரிய பிளவை தவிர்க்கும் பொருட்டே முஸ்லிம் காங்கிரஸ் குறித்த தீர்மானத்தை எடுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, கிழக்கு மாகாண புதிய முதலமைச்சராக

13

## கடனட்டை மோசடியில் சம்பந்தப்பட்ட திருமலை நபர்கள் யார்?




பெருந்தொகைப்பணத்தைக் கடனட்டை மூலம் மோசடி செய்து பெற்றுக்கொண்ட நால்வரில் திருகோணமலையைச் சேர்ந்தவர்களும் கைதாகியிருப்பதாகக் காவல்துறை அறிவித்துள்ளது.

இம் மோசடியுடன் சம்பந்தப்பட்ட நான்கு பேரை 437 கடன் அட்டைகளுடன் காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். கடந்த 3ம் திகதி தெஹிவளையில் வைத்து இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த கடன் அட்டைகளை கொண்டு நாட்டின் பல இடங்களிலும் பெருந்தொகை பணத்தொகை மீளப்பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள காவல்துறை

13

## சம்பூர் இடம்பெயர்ந்தோர் வள்ளிக்கேணியில் குடியேற விருப்பம் ?



மூதூர் கிழக்கு பிரதேசத்திலிருந்து கடந்த 2006ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள 162 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள், வள்ளிக்கேணியில் மீள்குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தங்களது பூர்வீகக் கிராமமான சம்பூரை விடுத்து, வள்ளிக்கேணயில்

13

மேன்கமம் அபிராமி விவசாயச் சம்மேளனத்திற்குரிய

# நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளில் அத்துமீறிய குடியேற்ற முயற்சி



மூதூரில் நூற்றுக்கணக்கான ஏக்கர் குளத்துவெளிக் காணியினைச் சட்ட விரோதமாகக் கைப்பற்றமுனைந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களின் முயற்சி தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளது.

கடந்த 05ம் திகதி சேருவிலையைச் சேர்ந்த ஒருவரும் தெஹிவத்தையைச் சேர்ந்த மேலும் இருவரும் மேன்கமத்தின் வசிக்கும் சிங்கள வயோதிபப் பெண்ணொருவரின் தலைமையிலேயே இந் நடவடிக்கையை

13

ABSARAS CITY HOTEL
அப்சராஸ் சிற்றி ஹொட்டல்

09.06.2014 அன்று
கோலாகலமாக
திருமலை நகரில்
சகல வசதிகளுடனும்
திறக்கப்படவுள்ளது



- சொகுசு மெத்தை,
- சுடுநீர்க்குளியல்,
- Wi-Fi இணையதள வசதி,
- குளிரூட்டப்பட்ட அறைகள், Tv
- கருத்தரங்கு, பிறந்தநாள் வைபவ மண்டப வசதி ( Balconey )
- திருமலை சுற்றுலா இடங்கள் பார்க்க, JEEP SAFARI உள்நாட்டு, வெளிநாட்டவர்களுக்கு.
- நகரின் மையப்பகுதியில் இருந்து 1500 மீட்டர் மட்டுமே.

விபரங்களுக்கு:-

பணிப்பாளர்: 0770392272, முகாமையாளர்: 0775389186
அலுவலகம்: 0265679707
492. நிலாவெளிவீதி, திருக்கடலூர், திருகோணமலை.

## தீயணைப்புத்துறையினை உருவாக்கியது திருகோணமலை நகரசபை




திருகோணமலை நகர சபையினால் தீ அணைப்பு மற்றும் அவசர மீட்பு பிரிவு கடந்த திங்கட்கிழமை 02.06.2014 ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இதற்கான கட்டிடம் அமைக்கப்பட்டதுடன் தீயணைப்பு இயந்திரங்கள். விரைவு வண்டி, பிக் அப் வாகனம் என்பனவும் அந்நாட்டினால் வழங்கி வைக்கப்பட்டு உள்ளது.

திருமலை நகரசபைத் தலைவர் க.செல்வராசா இப்பிரிவைச் சம்பிரதாயமாக ஆரம்பித்து வைத்தார். 17 வீரர்கள் இங்கு சேவைக்காக அமர்த்தப்பட்டு உள்ளனர்.

13



தீயணைப்புத் தொலைபேசி 026 -2222100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

MALAIMURASU

இல 159ஏ. கடல்முக வீதி

திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042


## கிழக்கின் ஆட்சி மாற்றமும் தமிழ் மக்களும் !!!

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலின் பின்னர் ஆசனப் பட்டியலில் அதி கூடிய ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையைத் தவறவிட்டதால் தனியாட்சி அமைக்கும் வாய்ப்பை இழந்த போதுதான் அடுத்த படிநிலைகளில் இருந்த அதாவது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் முஸ்லிம் காங்கிரசும் தம்மிடையே ஏற்படுத்திக் கொண்ட கூட்டின் ஊடாக கிழக்கின் ஆட்சிக்கதிரையில் ஏறிக்கொண்டன.....

அவ்வாறு ஆட்சியைப் பிடிப்பதற்காக இவ்விரு கட்சிகளிடையேயும் ஏற்படுத்தப்பட்ட பேரம் பேசல்கள் மத்திய அமைச்சர் பதவிகள், மத்திய துணைஅமைச்சர் பதவிகள் போன்ற சில விடயங்கள் உட்பட கிழக்கின் முதலமைச்சர் பதிவியைச் சுழற்சி முறையில் பகிர்வது என்பதும் உள்ளடங்கியிருந்தது.

இவ்விணைவின் ஊடாக முஸ்லிம் காங்கிரஸ் தலையிடியை எதிர்கொள்ளும் என அன்றைய தினத்தில் மலைமுரசின் அரசியல் பத்தியின் எதிர்வுகூறல் அமைந்திருந்தது.

கிழக்கில் ஆட்சியமைத்த முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்கள் பெரும் பாலும் கட்சித் தலைமையின் முடிவுகளுக்கு கட்டுப்படாமலிருந்ததைப் பல சந்தர்ப்பங்களில் அறிய முடிந்தது. அதுதான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தந்திரோபாயம். இத் தந்திரோபாயத்திற்கு அனைத்துக் கட்சிகளும் பலியாகிவிட்டன. அயல் கட்சியின் அங்கத்தவர்களை எதைக் கொடுத்தேனும் விலைக்கு வாங்கத் தயாராக ஐ.ம.சு.மு வின் இத் தந்திரோபாயத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பலியாகினார்.

தற்போது தேசிய சுதந்திர முன்னணியின் அங்கத்தவர்களை ஐ.ம.சு.மு வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இவ்வாறான நிலையில் கிழக்கின் முதலமைச்சர் பதிவிக்கான முதலாவது சுழற்சியின் நிறைவில் முஸ்லிம் காங்கிரஸ் அப் பதவியைப் பொறுப்பேற்று தனது அங்கத்தவரொருவருக்கு வழங்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது. இவ்வாறு இரண்டாவது காலப்பகுதியை ஐ.ம.சு.மு முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்கியதும் ஒரு தந்திரோபாயமே.

அத் தந்திரோபாயப்படி தற்போது யாரை முதலமைச்சராக்குவது என்ற அழுத்தத்தினை அக் கட்சி தாங்கிக் கொண்டுள்ளது.

ஆனால் எது எப்படியோ இந்த ஆட்சி மாற்றம் கிழக்குத் தமிழர்களின் வாழ்வியலிலும் அரசியல் நடவடிக்கையிலும் எவ்வித மாற்றத்தையும் உண்டாக்கப் போவதில்லை. இந்த நிலைதான் சனநாயகத்தின் பெயரால் எமக்கிழைக்கப்பட்ட அநீதி எனலாம். அதிகூடிய ஆசனங்களை நாம் கொண்டிருந்த போதும் எமக்கான ஆட்சி கைநழுவிப்போய் இரு கட்சிகளிடையே பந்தாடப்படுகின்றது.

கிழக்கிற்கென தனியானதொரு அரசியல் தந்திரோபாயத்தை தமிழத் தேசியக் கூட்டமைப்பு வகுத்து அதன் வழி செல்ல வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதன் முதற்படியாக இனியாவது எதிர்வரும் காலங்களில் வாக்குகளைச் சிதறடிக்கவிடாமல் ஒரு முகத்தன்மையை வாக்களிப்பில் உருவாக்கும் முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டும். அதனைத் தலைமையேற்றுச் செய்ய வேண்டியவர்களாக இருப்பது தமிழத் தேசியக் கூட்டம்ப்பின் உள்ளூர்ப் பிரதிநிதிகளே...

அவர்கள் அறிக்கைகளை விடுவதை மட்டும் செய்யாமல், விழித்தெழுந்து மக்களைத் தேடி வரவேண்டும்... வருவார்களா?

## ஆற்றுக்குள் பாய்ந்தது பேருந்து அதிஸ்டத்தால் தப்பினர் பயணிகள்

கல்முனை நகரில் இருந்து 48 பயணிகளுடன் சவளக்கடை ஊடாக 11ம் கொளனி நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று காலை தனது கட்டுப்பாட்டை இழந்து கிட்டங்கி ஆற்றுக்குள் குறித்த பேருந்து வீழ்ந்துள்ளது.

எனினும் பயணிகள் அதிஷ்டவசமாக காப்பாற்றப்பட்டுள்ளனர்.

காலை 7.15க்கு கல்முனை நகரில் இருந்து நாவிதன்வெளி பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் நலன்கருதியே இப் பேருந்துச் சேவை இடம்பெறுகிறது.

ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களை ஏற்றியபடி கிட்டங்கி வீதியால் வந்துகொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டை மீறி ஆற்றுக்குள் பாய்ந்ததுடன் சாரதியின் சாமத்தியத்தால் குடைசாயாது பாரிய விபத்தில் இருந்து தப்பியுள்ளது.

இதேவேளை ஸ்தலத்திற்கு வருகை தந்த சவளக்கடைப் காவல்துறை விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## வாகனங்களில் வர்ண விளக்கிற்குத் தடை



வாகனங்களில் பிரதான விளக்கிற்கு மேலதிகமாகக் பல்வர்ண விளக்குகளைப் பொருத்துவதை காவல் துறையினர் தடைக்குட்படுத்தியுள்ளனர்.

இத் தடை உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது எனவும் வாகனங்களில் மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ள வர்ண விளக்குகளை காவல்துறையினர் கண்டவுடன் அகற்றுவர் என்றும் போக்குவரத்துக் காவல்துறைப் பிரதிக் காவல் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## 13 கோடி ரூபா டொலர்களுடன் யாழ் இளைஞர்கள் கைது

13 கோடி 'ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர் வைத்திருந்த யாழ்ப்பாண இளைஞர்கள் மூவரைக் கிண்ணியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. உல்லாசப் பயணிகளாக வந்தவர்களிடம் அமெரிக்க டொலர் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மூவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொண்ட போது திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் கொழும்பில் உள்ள தனது நண்பரின் உதவியுடன் டொலரை மாற்றித் தருவதாக கூறியதையடுத்து டொலருடன் கிண்ணியாவுக்கு வேனில் வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

டொலரை மாற்றித் தருவதாகக் கூறிய நண்பருடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வேளையிலேயே உப்பாற்று பாலத்தில் காவல்துறையினர் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் தற்பொழுது திருகோணமலையில் வசிப்பவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வாவியில் முதியவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பாலத்துக்கு அருகில் மட்டக்களப்பு வாவியில் முதியவர் ஒருவரின் சடலத்தினை காவல்துறை மீட்டுள்ளனர்.

கடந்த (04) புதன்கிழமை காலை மட்டக்களப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் லேடி மெனிங்க வீதியில் வாவி கரையில் இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் மட்டக்களப்பு, பாடுமீன் வீதியை சேர்ந்த சின்னத்தம்பி சித்திவேல் (70வயது) என்பவருடையது என உறவினர்களினால் அடையாளங் காணப்பட்டுள்ளது

அவர் காலையில் தினமும் வாவிக்கு சென்று குளித்துவரும் நிலையிலேயே இன்று காலை இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றின் நீதிபதியின் அறிவுறுத்தலின் கீழ் சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது

## திருமலையிலும் வல்லப்பட்டைக் கடத்தல்

திருகோணமலை உப்புவெளி பகுதியில் வல்லப்பட்டையுடன் கைது செய்யப்பட்ட நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இன்று திருகோணமலை பதில் நீதவான் திருச்செந்தில் நாதன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இம்மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மொனராகலை பகுதியில் இருந்து முச்சக்கரவண்டியில் மூதூருக்கு வல்லப்பட்டையை கொண்டுவந்தவேளை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## டெங்கு ஒழிப்புக்காகச் சென்றவரிடம் வசமாக மாட்டினார் கடலாமைக் கள்வன்

திருகோணமலை கிண்ணியா பகுதியில் சட்டவிரோதமாக கடல் ஆமையொன்றை மறைத்து வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து பொலிஸார் இந்த ஆமையை கண்டுபிடித்ததாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

சுமார் 10 கிலோகிராம் நிறையுடைய கடல் ஆமை வீடொன்றின் தன்னீர் தொட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

## மலேசியாவில் நிகழ்ந்தது விபத்தா? கொலையா?

மட்டக்களப்பு களுதாவளையை பிறப்பிடமாக் கொண்ட அருந்தவச்செல்வன் சச்சுதன் என்பவரின் விபத்து மரணம் தொடர்பாக சந்தெகத்தை அவரது மனைவி எழுப்பியுள்ளார்.

கடந்த 24ம் திகதி மலேசியாவில் நடைபெற்றதாகக் கூறப்படும் மோட்டார்சைக்கிள் விபத்தில் இவர் உயிர் இழந்திருந்தார். இவர் மரணம் தற்செயலானது அல்ல என்றும் கடந்த சில காலங்களாக ஆட்கடத்தல் தரகர்களுடன் முரண்பட்டுக்கொண்டிருந்ததால் தனது கணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக மலேசியாவில் பணியாற்றிவரும் இவர் அவுஸ்திரேலியாவிற்குச் சட்டவிரேதமாகச் செல்வதற்கு சுமார் எட்டு லட்சம் ரூபாயகளைக் கடத்தல் காரருக்குக் கொடுத்திருந்தார் என்றும் அதனால் ஏற்பட்ட பிணக்கினை அடுத்து அவர் கடத்தல்காரர்களுடன் முரண்பட்டுக்கொண்டிருந்ததாகவும் மனைவி தெரிவித்துள்ளார்.

## கிழக்கு பல்கலை விரிவுரையாளர் அடையாளப் பணிப் புறக்கணிப்பு

கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடந்த அடையாள பணிப்பகிஸ்கரிப்பு போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

நாடெங்கிலும் இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடம்பெற்றவேளையில் கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நடத்தப்பட்டது.

சில கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆய்வுப் பணிகளுக்கான கொடுப்பனவு தொடர்பில் நிபந்தனை விதிக்கக் கூடாது உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



## தனிமையில் இருந்த பெண் வன்புணர்வு - மொரவெவவில் சம்பவம்

திருகோணமலை, மொறவெவ - தெவணி பியவர பகுதியில் பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் தனிமையில் இருந்த 37 வயதான பெண்ணை, மதுபோதையில் இருந்த சந்தேகநபர் கடந்த 3ம் திகதி இரவு வன்புணர்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டவர் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.


சந்தேகநபரை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக மொறவெவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய விதைகள் சட்டம் விவசாயிகள் எதிர்ப்பு

## - பி.பி.சி -



சனத்தொகைப் பெருக்கம், பருவநிலை மாற்றங்கள் இப்படியான சவால்களை எதிர்கொண்டிருக்கின்ற உலக நாடுகளுக்கு விவசாயத்திற்குத் தேவையான விதைகளை விருத்தி செய்வதும் பாதுகாப்பதும் இன்று பெரும்பிரச்சனைக்குரிய விடயமாகியுள்ளது.

இலங்கையில் இது சர்ச்சைக்குரிய அரசியல் பிரச்சனையாக உருவெடுத்து உள்ளது.

விவசாய விதைகளைப் பாதுகாப்பதற்கான உரிமை தொடர்பில் விவசாய திணைக்களத்தின் இயக்குநருக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் புதிய விதைகள் சட்டத்தை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் வணிக நிறுவனங்கள் விற்கின்ற விதைகள் மூலம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காவிட்டால், அந்த நிறுவனங்களை அதற்குப் பொறுப்பாக்குவதே இந்த புதிய சட்டத்தின நோக்கம் என்று விவசாய அமைச்சின் விவசாய தொழிநுட்பம் தொடர்பான மேலதிகச் செயலாளர் டி.பி.டீ. விஜேரட்ன பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

ஆனால், விவசாய சங்கங்களோ இந்த சட்டம் நடைமுறைக்கு வரவேக்கூடாது என்று விடாப்பிடியாக இருக்கின்றனர். சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அவர்களது கருத்தையே பிரதிபலிக்கின்றனர்.

**பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம்:**

விதைகளை உருவாக்கி விற்கும் பல்தேசிய கம்பனிகளுக்கு முழுமையான ஆதிக்கத்தைக் கொடுப்பது தான் இந்த சட்டத்தின் நோக்கம் என்று அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தமிழோசையிடம் கூறினார்.

“எமது நாட்டில் 3000க்கும் மேற்பட்ட நெல்வகைகள் ஒருகாலத்தில் இருந்தன. ஆனால் இன்று 75 வரை தான் இருக்கின்றன. எமது பாப்பாளிப் பழம், தக்காளி, மிளகாய் ரகங்கள் எல்லாம் இன்று காணாமல்போய்விட்டன. இன்று எங்களிடம் இருப்பது வெளிநாட்டு பல்தேசிய கம்பனிகள் வழங்கிய விதை ரகங்கள் தான். அவற்றிலிருந்து இரண்டாவது தலைமுறை விதைகளைப் பெறமுடியாது“ என்றார் நாமல் கருணாரத்ன.

விதைகளை உருவாக்கவும் வைத்திருக்கவும் கொண்டுசெல்லவும் விவசாய திணைக்களத்தின் அனுமதி பெற வேண்டும் இல்லாவிட்டால் 6 மாத சிறைத் தண்டனையோ அல்லது 50 ஆயிரம் ஷரூபா அபராதமோ விவசாயிகளுக்கு விதிக்கப்படலாம் என்கின்ற புதிய சட்டப்பிரிவே விவசாயிகள் மத்தியில் கிளம்பியுள்ள பெரும் எதிர்ப்புக்கு முக்கிய காரணம்.

ஆனால், இந்த சட்டத்தை அரசாங்கம் கொண்டுவருவதன் பின்னணி தொடர்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு சந்தேகம் இருப்பதாக சுற்றுச்சூழல். பாதுகாப்பு நிதியத்தின் இயக்குநர் எஸ். விஸ்வலிங்கம் தமிழோசையிடம் கூறினார்.

விதை விநியோகத்தில் தனியார் நிறுவனங்களுக்கு இருக்கின்ற ஆதிக்கத்தைத் தடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசிடம் உரிய நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி பி. சிவராஜா தெரிவித்தார்.

# ஒரு ரயில் பயணமும் நினைவில் நீங்கா இருவரும்

24 ஆண்டுகளுக்கு முன்னர், தங்கள் பரிவுமிக்க அணுகுமுறையால் இந்தக் கட்டுரையாளரை ஆச்சரியத்தில் ஆழ்த்திய இரு பயணிகள் பற்றிய பதிவு.

1990-ம் ஆண்டு. அது கோடை காலம். அப்போதுதான், நானும் என் தோழியும் இந்திய ரயில்வே போக்குவரத்துத் துறையில் இணைந்திருந்தோம். அது நாங்கள் தற்காலிக பணியாளர்களாக இருந்த காலக்கட்டம்.

நாங்கள் இருவரும் லக்னோவில் இருந்து டெல்லிக்கு ரயிலில் சென்று கொண்டிருந்தோம். அதே பெட்டியில் இரண்டு எம்.பி.க்களும் இருந்தனர். அவர்களுடன், அதே பெட்டியில் டிக்கெட் முன்பதிவு செய்யாமலேயே 12 பேர் பயணித்தனர். அவர்களைப் பார்த்து நாங்கள் மிகவும் பயந்து போனோம்.

முறையாக டிக்கெட் முன்பதிவு செய்து பயணித்துக் கொண்டிருந்த எங்களை எங்களுக்காக ஒதுக்கப்பட்ட படுக்கையை விட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தினர். தகாத வார்த்தைகளை பயன்படுத்தினர். வேறு வழியின்றி நாங்களும் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு வெளியேறினோம்.

நாங்கள் கொண்டுவந்த உடைமைகள் மேலேயே அமர்ந்து பயணித்தோம். பயத்தில் பதுங்கிக்கொண்டோம். ஆனால் எங்களுக்குள் ஆத்திரம் கொதித்துக் கொண்டிருந்தது. சற்றும் நாகரிகம் அறியாத அந்தக் கூட்டத்தினருடன் அன்றைய இரவுப் பயணம் மிகவும் மோசமானதாக இருந்தது.

சுயமரியாதைக்கும், அவமரியாதைக்கும் ஒரு மெல்லிய நூழிலை இடைவெளியில் நாங்கள் சிக்கி இருந்தோம். டிக்கெட் பரிசோதகர் அன்று இரவு மாயமானார்.

அடுத்த நாள் காலை, கனத்த மனதுடன் டெல்லி வந்தடைந்தோம். அந்த குண்டர்களால் தாக்கப்படவில்லை என்பதே ஒரே ஆறுதல். என்னுடன் பயணித்த தோழி, ரயில் சம்பவத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தாள். அந்த இரவு தந்த கோர அனுபவத்தால் அகமதாபாத்தில் நடைபெறவிருந்த அடுத்தக் கட்ட பயிற்சியை புறக்கணிக்க முடிவு செய்து டெல்லியிலேயே தங்கிவிட்டார். ஆனால், நான் பயிற்சியை தொடர்வது என்று முடிவு செய்தேன். என்னுடன் வேறு ஒருவர் இணைந்துகொண்டார். ( அவர், உத்பல்பர்னா ஹசாரிகா. இப்போது ரயில்வே வாரியத்தில் செயலாக்க இயக்குநராக உள்ளார்).

இருவரும், இரவு குஜராத் செல்லும் ரயிலில் ஏறினோம். இந்த முறை எங்கள் முன்பதிவு உறுதியாகவில்லை. காத்திருப்போர் பட்டியலில் இருந்தது.

ரயிலில் கூட்டம் அதிகமாக இருந்ததும் எங்களுக்கு தெரிந்தது. முதல் வகுப்பு டிக்கெட் பரிசோதகரை அணுகினோம். அகமதாபாத்திற்கு சென்றே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருப்பதை எடுத்துரைத்தோம். அவர் எங்களிடம் மிகவும் தன்மையாக பேசினார். எங்கள் இருவரையும் முதல் வகுப்பு கூபேவுக்கு அழைத்துச் சென்று அமர இடம் அளித்தார். அங்கே ஏற்கெனவே இருவர் இருந்தனர். வெள்ளை நிற கதர் ஆடையில் இருந்த அவர்களைப் பார்த்ததுமே அரசியல்வாதிகள் என தெரிந்துகொண்டேன். ஏதோ இனம்புரியாத பயம் என்னை ஆட்கொண்டது.

அப்போது குறுக்கிட்ட டிக்கெட் பரிசோதகர்: "இவர்கள் இருவரும் இந்த மார்க்கத்தில் அடிக்கடி பயணம் செய்பவர்கள். மிகவும் நாகரிகமானவர்கள். நீங்கள் பயப்படத் தேவையில்லை" என்றார். ஒருவருக்கு 40 வயது மதிக்கலாம். சற்றே பாந்தமான முகபாவத்துடன் இருந்தார். இன்னொருவருக்கு 30 வயது மதிப்பிடலாம். அவரிடம் ஏதோ ஒரு வசீகரம் இருந்தது. எங்களை பார்த்தவுடனேயே, நாங்களும் அமர்ந்துகொள்ளும் வகையில் இருக்கையில் மற்றொரு ஓரத்திற்கு இருவரும் நகர்ந்து கொண்டனர்.

எங்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். இருவரும் குஜராத்தைச் சேர்ந்த பாஜக தலைவர்கள். தங்கள் பெயர்களைக் கூட எங்களிடம் சொன்னார்கள். ஆனால், வழக்கம் போல் ரயில் சக பயணிகள் பெயரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள தேவையற்றதாக இருந்தது, மூளைக்கு. பதிலுக்கு நாங்களும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ரயில்வேயில் தற்காலிகப் பணியில் இருப்பதாகவும் தெரிவித்தோம். எங்களது பேச்சு அடுத்தடுத்த கட்டங்களை எட்டியது. வரலாறு, அரசியல் என விரிவடைந்தது.

## வாராந்த அலசல்

**செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்**

எனது தோழி, டெல்லி பல்கலைக்கழகத்தில் வரலாறு பயின்றவர் என்பதால் மிகவும் ஆழமான பேச்சாக இருந்தது அது. நானும் அவ்வவ்போது இடையில் ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தேன். பேச்சு அப்படியே ஹிந்துமகாசபை அமைக்கப்பட்டது குறித்தும், முஸ்லீம் லீக் உருவாக்கம் குறித்தும் திசை திரும்பியது.

இரண்டு அரசியல்வாதிகளில், மூத்தவர் மிக ஆர்வத்துடன் பேசிக்கொண்டிருந்தார். இளையவர் அவ்வப்போது பேசிவிட்டு பெரும்பாலும் பேச்சை கூர்ந்து கவனித்தவாறு இருந்தார். ஆனாலும், அவர் உடல் அசைவுகள் அவர் அங்கு நடைபெற்ற பேச்சில் முழு கவனத்தையும் பதித்திருப்பதை உணர்த்தியது.

அப்போது நான் திடீரென, ஷியாம் பிரசாத் முகர்ஜி பற்றி கேள்வி எழுப்பினேன். அவர் எப்படி இறந்தார். அவரது இறப்பு ஏன் இன்னும் ஒரு புதிராகவே இருக்கிறது என்றேன். அதுவரை அமைதியாகவே இருந்த இளையவர், ஷியாம் பிரசாத் முகரிஜியை எப்படித் தெரியும் என கேள்வி எழுப்பினார்.

எனது தந்தை கோல்கத்தா பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது அங்கு துணைவேந்தராக இருந்த ஷியாம் பிரசாத் எனது தந்தைக்கு கல்வி உதவித் தொகைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். 1953-ல் ஷியாம் பிரசாத் இறந்த போது, என் தந்தை மிகவும் வருந்தினார். அவர், தனக்கு செய்த உதவிகளை அடிக்கடி நினைவுகூர்வார், என்று பதில் கூறினேன்.

நான் கூறியதை கேட்டு விட்டு தனக்குள் முணுமுணுத்த அவர், "இவர்களுக்கு நிறைய விஷயம் தெரிந்திருக்கிறது" என்றார்.

உடனே, மற்றொருவர் கேட்டார்: "ஏன் நீங்கள் குஜராத் மாநிலத்தில் எங்கள் கட்சியில் சேரக் கூடாது?". நாங்கள் அந்த கணத்தில் சிரித்தோம். நாங்கள் குஜராத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றோம். அப்போது, சற்று ஆளுமையுடன் குறுக்கிட்ட இளையவர் "அதனால் என்ன?" என்றார். எங்களுக்கு அதைப் பற்றி எந்த பிரச்சினையும் இல்லை. அறிவாளிகளுக்கு எங்கள் மாநிலத்தில் நல்ல வரவேற்பு உண்டு என்றார். அவருடைய அந்த மவுனத்தில் ஒரு பொறி தெரிந்தது.

பேசிக்கொண்டிருந்தபோதே உணவு வந்தது. நான்கு பிளேட் சைவ உணவு. அனைவரும் மிக அமைதியாக உணவு அருந்தினோம். இளையவர், எங்கள் அனைவருக்கும் சேர்த்து பணம் வழங்கினார். கொஞ்சம் தழுதழுத்த குரலில் நன்றி என்றேன். ஆனால் அவர் அதை பொருட்படுத்தவில்லை.

அப்போது அவர் கண்களில் ஓர் ஒளி தெரிந்தது. அதை யாரும் கவனிக்காமல் இருந்திருக்க முடியாது. எப்போதாவது பேசியும், பெரும்பாலும் கவனத்தை செலுத்தியும் இருந்தார் அந்த நபர்.

டிக்கெட் பரிசோதகர் வந்தார். ரயிலில் கூட்டம் அதிகம் இருப்பதால் படுக்கை ஒதுக்கித் தர முடியாது என்றார். பரவாயில்லை, நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்ற இருவரும் பையில் இருந்த துணியை எடுத்து தரையில் விரித்துபடுத்துக்கொண்டனர். படுக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டோம்.

முதல் நாள் இரவு ஒரு சில அரசியல்வாதிகளால் எங்கள் பயணம் பயமும், பதற்றமுமாக இருந்தது. ஆனால் அடுத்த நாளே, இரு அரசியல்வாதிகளுடன் எவ்வித பயமும் இல்லாமல் பயணம் இருந்தது. என்ன ஒரு வேறுபாடு!

அடுத்த நாள் காலை, ரயில் அகமதாபாத்தை அடைந்தது. நாங்கள் எங்கு தங்கப் போகிறோம் என இருவருமே விசாரித்தனர். மூத்தவர் சொன்னார். உங்களுக்கு தங்குமிடம் ஏற்பாடு செய்வதில் சிக்கல் இருந்தால், என் வீட்டின் கதவு எப்போதுமே திறந்திருக்கும் என்றார். அந்த குரலில் உண்மை இருந்தது. இளையவர், முகபாவம் வேறு ஏதோ உணர்த்துவதாக இருந்தது. நான் ஒரு நாடோடி மாதிரி. எனக்கு நிரந்தரமாக வீடு இல்லை. உங்களை அழைக்க முடியாது என்றார்.

அவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு. தங்கும் இடம் பிரச்சினையாக இருக்காது என்பதையும் தெரிவித்தோம்.

ரயில் நிற்கும் சில நிமிடங்களுக்கு முன்னர் வேகமாக என் டைரியை எடுத்துக் கொண்டு அவர்கள் பெயர்களை மீண்டும் கேட்டேன். நல்ல உள்ளம் கொண்ட அந்த பயணிகள் பெயர்களை மறக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். மேலும், அரசியல்வாதிகள் மீதான என் பார்வையை மாற்றி அமைத்த அவர்கள் பெயர்கள் எனக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. வேகமாக பெயர்களை டைரியில் கிறுக்கிக் கொண்டேன்.

ஒருவர் பெயர் சங்கர்சிங் வகேலா, மற்றொருவர் பெயர் நரேந்திர மோடி.

1995-ல் இந்த ரயில் பயணம் குறித்து அசாம் நாளிதழில் எழுதினேன். அசாமில் இருந்து வந்த இருவருக்கு ரயில் பெட்டியில் இடமளித்து, பயணத்தை சுமுகமாகிய குஜராத் அரசியல்வாதிகள் இருவருக்கு ஒரு புகழாரமாக அது அமைந்தது. அதை எழுதும்போது, அந்த இரு நபரும் இந்திய அரசியலில் இவ்வளவு பெரிய இடத்தைப் பிடிப்பார்கள் நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்களைப் பற்றி பின் எப்போதும் ஏதாவது செய்திகள் படிப்பேன் என்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், 1996-ல் வகேலா குஜராத் முதல்வரான போது மகிழ்ச்சி அடைந்தேன். 2001-ல் நரேந்திர மோடி குஜராத் முதல்வரானபோது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

மோடி முதல்வரான ஒரு சில மாதங்களுக்குப் பின்னர் அசாம் நாளிதழ் மீண்டும் என் நினைவுக் கட்டுரையை பிரசுரம் செய்தது. இப்போது, அவர் பிரதமராகிவிட்டார்.

ஒவ்வொரு முறை அவரை தொலைக்காட்சியில் பார்க்கும்போதும், எங்களுக்கு அவர் அளித்த உணவும், எங்களை உபசரித்த விதமும், ரயில் பயணத்தில் நாங்கள் உணர்ந்த பாதுகாப்புமே நினைவுக்கு வருகிறது. தலை வணங்குகிறேன்.

(இக்கட்டுரையை எழுதியவர் புது டெல்லி, ரயில்வே தகவல் மையத்தின் பொது மேலாளர்



நன்றி குளோபல் தமிழ்ச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வனவாசத்தின் 10 ஆண்டு நிறைவு

இரா.துரைரத்தினம்

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல்துறை தலைவர் தம்பையாவின் படுகொலையின் பின்னர் அடுத்த இலக்கு யார் என்ற கேள்வி எம்மைப்போன்ற பலரிடமும் காணப்பட்டது. அதை வெளிப்படையாக 2004 மே 30ஆம் திகதி ஞாயிறு வீரகேசரியில் நடேசன் எழுதிய கட்டுரையிலும் இக்கேள்வியை எழுப்பியிருந்தார்.

2004 மே 31ஆம் திகதி நடேசனின் மரணம் நிகழ்ந்த தினம் மட்டுமல்ல, தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் மட்டக்களப்பை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட தினமும் அன்றுதான்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் இன விடுதலை என்ற நோக்கில் பல முனை செயற்பாடுகளில் உறுதியாக செயற்பட்டவர்கள் மட்டக்களப்பில் அக்காலத்தில் இருந்த தமிழ் ஊடகவியலாளர் என்பது இலங்கை தமிழ் ஊடகப்பரப்பில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.



யாழ். குடாநாட்டுடனான தொடர்பாடல்கள் துண்டிக்கப்பட்ட போது வவுனியா மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களே கொழும்புடனும், சர்வதேசத்துடனும் தொடர்பாடல்களை கொண்டிருந்தது. இதன் விளைவாக மேற்குலக நாடுகளில் இயங்கிய தமிழ் ஊடகங்களுக்கான பிரதான செய்தியாளர்களாக மட்டக்களப்பு மற்றும் வவுனியாவில் இருந்தவர்களே செயற்பட்டனர்.

1980களில் சுகுணம் யோசப் என்றழைக்கப்பட்ட பி.ஜோசப் (பிற்பட்ட காலத்தில் அவர் ஜோசப் பரராசசிங்கம் என அழைக்கப்பட்டார்) வீ.சு.கதிர்காமத்தம்பி, போன்றோர் மட்டக்களப்பில் ஊடகத்துறையை ஆட்சி செய்தனர். அதன் பின்னர் 1990களின் பின்னர் மட்டக்களப்பில் தமிழ் ஊடகத்துறையில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த மறுமலர்ச்சியின் முக்கிய பங்குதாரர்களாக சிவராம், நடேசன் போன்றவர்களையே நான் பார்க்கிறேன்.

கரவெட்டியில் நெல்லியடியில் பிறந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதியும் முகாமைத்துவமும் துறையில் பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட நடேசன் கம்பஹாவில் ஆசிரியராக பணியாற்றினார். அதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட போது வரதராஜப்பெருமாள் தலைமையிலான மாகாண அரசாங்கத்தில் தகவல் தொர்டர்பு உதவிப்பணிப்பாளராக பதவி ஏற்றார்.

1990 ஜனவரியில் மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர் அவர் மட்டக்களப்புக்கு வந்த போது விடுதலைப்புலிகள் அவரை பிடித்து சென்று சிறை வைத்ததும் 50ஆயிரம் ரூபா பணத்தை வாங்கிக் கொண்டு விடுதலை செய்ததும் பழைய கதைகள்.

விடுதலைப்புலிகளின் முகாமாக இருந்த மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் இருந்த மாடி வீடு ஒன்றிலேயே நடேசன் விடுதலைப்புலிகளால் சிறைவைக்கப்பட்டிருந்தான். அந்த நேரத்தில் ஒருநாள் நான் அவனை பார்க்க சென்றிருந்தேன். என்னை புலிகள் விடுவார்களா என்று ஏக்கத்தோடு நடேசன் என்னிடம் கேட்டான். 50ஆயிரம் ரூபா பணம் கேட்கிறார்கள் நான் அதற்கு எங்கு செல்வேன் என ஏக்கத்தோடு சொன்னான். அப்போது அவனுக்கு 50ஆயிரம் ரூபா் கொடுக்க கூடிய வசதியானவனாக நான் இருக்கவில்லை. ஒரு பக்கற் சிகரட்டை மட்டும் வாங்கி கொடுத்து விட்டு வந்தேன்.

50 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று விட்டு மூன்றுவார சிறையின் பின்னர் விடுதலைப்புலிகள் நடேசனை விடுதலை செய்தார்கள். அக்காலப்பகுதியில் நடேசனிடம் 50ஆயிரம் ரூபா பணம் இருந்ததில்லை, கரவெட்டியில் இருந்த அவனின் அக்காவே 50ஆயிரத்தை கொண்டு வந்து கொடுத்து நடேசனை விடுவித்தார்.

நடேசன் கொல்லப்பட்ட மறுநாள் காலை அவரின் வாவிக்கரை வீதி வீட்டில் சடலம் வைக்கப்பட்டிருந்த போது விடுதலைப்புலிக்ள் புலிக்கொடியை கொண்டு வந்து போர்த்தினார்கள். அப்போது கோவத்தோடு எழுந்து புலிக்கொடியை தூக்கி எறிந்தவர் புலிகளுக்கு 50 ஆயிரத்தை கொடுத்து மீட்டெடுத்த அவரின் அக்காதான்.

அன்று நான் 50ஆயிரத்தை தரவில்லை என்றால் அன்றே என்தம்பியை நீங்கள் சுட்டிருப்பீர்கள் என அவர் ஆவேசப்பட்டார். அந்த ஆவேசத்தின் நியாயத்தை நான் உணர்ந்து கொண்டேன்.

நடேசனோ அல்லது சிவராமோ விடுதலைப்புலிகள் இயக்கத்தை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தவர்கள் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் நியாயமான விடுதலைப்போராட்டத்தையும் அதனை முன்னெடுத்த காரணத்தால் விடுதலைப்புலிகளையும் ஆதரித்தார்கள். அதற்காக விடுதலைப்புலிகளின் அனைத்து செயற்பாடுகளையும் ஆதரித்தவர்கள் அல்ல.

1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நடேசன் மீண்டும் ஆசிரிய தொழிலுக்கு திரும்பினான். மட்டக்களப்பு இந்து கல்லூரியில் ஆசிரியராக பணியாற்ற தொடங்கினார்.

அக்காலத்தில் வீரகேசரி மட்டக்களப்பு செய்தியாளருக்கான வெற்றிடம் காணப்பட்டது. வீரகேசரியின் மட்டக்களப்பு செய்தியாளராக இருந்த நித்தியானந்தன் (மேஜர் நித்தி) புளொட் மோகனால் சுடப்பட்டு படுகாயமடைந்ததை தொடர்ந்து அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். இதனால் ஏற்பட்ட வெற்றிடம் நிரப்பபடாமல் இருந்தது.

இதன் பின்னர் 1991ஆம் ஆண்டு வீரகேசரியில் அப்போது செய்தி ஆசிரியராக பணியாற்றிய நடராசாவுடன் இருந்த நட்பு காரணமாக நடேசன் வீரகேசரியின் மட்டக்களப்பு செய்தியாளராக சேர்ந்து கொண்டார். சமகாலத்தில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

சுமார் ஆறுமாதம் வீரகேசரியில் மட்டக்களப்பு செய்தியாளராக பணியாற்றிய நடேசனை அந்நிறுவனம் திடீரென நிறுத்தி விட்டது. நடேசனை உடனடியாக நீக்குமாறு விடுதலைப்புலிகள் வீரகேசரி நிறுவனத்திற்கு கொடுத்த அழுத்தம் காரணமாக அவர் நிறுத்தப்பட்டார்.

அப்போது செழியன் பேரின்பநாயகமும், நானும் மட்டக்களப்பில் நடேசனுடன் செய்தியாளர்களாக இருந்தோம். மட்டக்களப்பு வாவிக்கரை ஓரம் காந்தி சிலைக்கு அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்து கொண்டு சிகரட் பற்றவைத்த வாறு நடேசன் கவலை தோய்ந்த முகத்தோடு சொன்னான்.

என்னிடம் 50ஆயிரம் ரூபா பணத்தை வாங்கினார்கள். அது போதாது என்று இப்போது எனது குடும்பத்திற்கு மாதாமாதம் வரும் ஒரு சிறுதொகையை கூட நிறுத்தி விட்டார்கள். ஏன் இப்படி எல்லாம் பழிவாங்குகிறார்கள் என அவர்களிடம் கேள் என நடேசன் என்னைப்பார்த்து சொன்னான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வந்ததை அன்றுதான் முதல்தடவையாக பார்த்தேன்.

அதன் பின்னர் 1992ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் மீண்டும் வீரகேசரி மட்டக்களப்பு செய்தியாளராக நியமிக்கப்பட்டார்.

அக்காலப்பகுதியில் தான் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தை மீண்டும் புனரமைத்து அதன் செயற்பாடுகளுக்கு புத்துயிர் கொடுத்தோம். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் 1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதலாவது தலைவராக ஜோசப் (ஜோசப் பரராசசிங்கம்) செயலாளராக நாகராசா (இப்போது ஒஸ்ரேலியாவில் இருக்கிறார்) தெரிவு செய்யப்பட்டி ருந்தனர். நானும் வீரகேசரி நித்தியும் வயதில் மிக இளையவர்கள். நான் உபசெயலாளராக நியமிக்கப்பட்டேன்.

அதன் பின்னர் வந்த நெருக்கடிகளால் அச்சங்கம் செயலிழந்திருந்தது. மீண்டும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தை புனரமைத்து செயற்பட வேண்டும் என்று ஆர்வம் காட்டியவர் நடேசன் தான். அதன் விளைவாக கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்தது. அதன் தலைவராக செழியன் பேரின்பநாயகம் (மட்டக்களப்பு மாநகர முதல்வராக இருந்தவர்) செயலாளராக நானும், பொருளாளராக நடேசனும் தெரிவு செய்யப்பட்டோம்.

செழியன் பேரின்பநாயகம் பின்னர் மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்டதும் அதன் பின்னர் பேசுவதற்கு என அழைத்த விடுதலைப்புலிகள் கல்முனையில் வீடு ஒன்றில் வைத்து செழியனை சுட்டுக்கொன்றதும் பழைய கதைகள்.

ஊடகவியலாளர் சங்கத்திற்கு ஊடகவியலாளர்களின் நலன்கள் மட்டுமல்ல தாம் சார்ந்திருக்கின்ற சமூகத்தின் நலன்களும் அவசியம் என அடிக்கடி நடேசன் வலியுறுத்துவான். அதன் விளைவாகவே கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்குகள் தொடக்கம் பல்வேறு செயற்பாடுகளில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஈடுபட ஆரம்பித்தது.

1994ஆம் ஆண்டில் சந்திரிக்கா பதவிக்கு வந்த சமாதான காலத்திலேயே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த படுவான்கரைக்கு அடிக்கடி செல்ல ஆரம்பித்தோம். இதன் பின்னர் விடுதலைப்புலிகளுக்கும் நடேசனுக்கும் இடையில் நெருக்கம் ஆரம்பமானது.

அதன் பின்னர் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன். நடேசன் உபதலைவராக தெரிவானார். செயலாளராக சண். தவராசாவும், உபதலைவர்களின் ஒருவராக ஜெயானந்தமூர்த்தியும், (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) பொருளாளராக அரியநேத்திரனும் (தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்) தெரிவு செய்யப்பட்டிருந்தனர். சிவராம், எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) ஆகியோர் ஆலோசகர்களாக செயற்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த காலம் மட்டக்களப்பு ஊடகத்துறை வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம்.

ஆயுதப்போராட்டம் மட்டும் விடுதலையை தந்து விடாது. மக்கள் அரசியல்மயப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மாதாந்தம் அரசியல் கருத்தரங்களை நடத்தியது. இதனை நானும் தவராசாவும் செயற்படுத்தினாலும் அதன் செயலுருவாக்கத்தில் மூல வேர்களாக இருந்தவர்கள் நடேசனும் சிவராமும் தான்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற தமிழர்களுக்கான அரசியல் தலைமை ஒன்றையும் உருவாக்குவதில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் முதன்மை பெற்றிருந்தது என்றால் அதன் மூலகர்த்தாக்கள் நடேசனும் சிவராமும் தான்.

அவர்களின் ஆளுமை, மட்டக்களப்பில் அவர்களின் உறுதியான செயற்பாடுகள் என்பன நடேசன். மரணித்த 2004 மே 31ஆம் திகதியுடன் அனைத்தும் முடங்கி விட்டது என்றே நான் கருதுகிறேன்.

நடேசன் மரணமடைந்த மறுநாள் அவரின் சடலம் அவரின் பிறந்த இடமான நெல்லியடிக்கு எடுத்து செல்லப்பட்டது. அவரின் உறவினர்களுடன் தவராசா, உதயகுமார், ஆகியோருடன் நானும் சென்றேன். மட்டக்களப்பிலிருந்து நாங்கள் வெளியேறிய நாளும் அதுதான். அதன் பின்னர் எங்களால் மட்டக்களப்பு மண்ணில் கால் பதிக்க முடியாமல் போய்விட்டது.

வவுனியா நுழைவாயிலில் வைத்து சடலத்தை பொறுப்பேற்பதற்கு விடுதலைப்புலிகள் பிரமாண்டான ஏற்பாடு செய்திருந்தார்கள். மட்டக்களப்பிலிருந்து அன்று காலையில் புறப்படுவதற்கு முதல் தமிழ்செல்வன் என்னிடம் தொடர்பு கொண்டு வவுனியா எல்லையில் வைத்து சடலத்தை தாம் பொறுப்பேற்பதாகவும், மறுநாள் கிளிநொச்சியிலும் அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறினார். இதனை நான் நடேசனின் குடும்பத்திற்கு கூறவில்லை. கூறினால் பெரும்குழப்பம் ஏற்படும் என எனக்கு தெரியும். ஏற்கனவே புலிக்கொடியை தூக்கி எறிந்து கோபப்பட்ட அவரின் அக்கா இதற்கு சம்மதிக்க மாட்டார் என்பது எனக்கு தெரியும். வவுனியாவுக்கு போனபின் பார்ப்போம் என மௌனமாக இருந்து விட்டேன்.

நடேசனின் சடலத்துடன் வந்த ஊடகவியலாளர் உதயகுமார் என்ன காரணமோ தெரியவில்லை வவுனியாவில் வைத்து திடீரென நான் மட்டக்களப்புக்கு திரும்ப போகிறேன் என கூறி மட்டக்களப்புக்கு வந்து விட்டார்.

எந்த நடேசனை விடுதலைப்புலிகள் அடைத்து வைத்து 50ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு விடுதலை செய்தார்களோ அதே நடேசனின் உடலுக்கு வன்னியில் விடுதலைப்புலிகள் மிகப்பிரமாண்டமான அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதன் பின்னர் நடேசன் கல்வி கற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உடல் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அதற்கான ஏற்பாடுகளை விடுதலைப்புலிகளே செய்திருந்தனர்.

அந்த அஞ்சலி நிகழ்வுக்கு என்னையே தலைமை தாங்குமாறு விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கேட்டிருந்தார்.



தென்னிலங்கையிலிருந்து வருகை தந்திருந்த சுனந்த தேசப்பிரிய உட்பட பலர் உரையாற்றினர்.

நடேசனின் உடல் நெல்லியடி இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது. அப்போதுதான் நாம் எங்கே போவது என்ற கேள்வி எனக்கும் தவராசாவுக்கும் ஏற்பட்டது.

நண்பர் சுனந்த தேசப்பிரிய போன்றவர்கள் எங்கள் நிலையை உணர்ந்து கொண்டு செயற்பட்டதன் விளைவாக நாம் பிறந்த மண்ணிலிருந்து வாழ்ந்த மண்ணிலிருந்து வனவாசம் செல்ல நேர்ந்தது. இந்த 10 ஆண்டுகளில் எத்தனையோ மாற்றங்கள்... அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு தமிழ் ஊடகத்துறை பெரும் அவலத்திற்கு தள்ளப்பட்டு விட்டது.

நடேசனின் மரணத்தை அடுத்து இலங்கையை விட்டு நானும் தவராசாவுமே முதலாவதாக வெளியேறிய ஊடகவியலாளர்கள் என நினைக்கிறேன். அதன் பின்னர் இலங்கையிலிருந்து சுமார் 20க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் வெளியேறியுள்ளனர். (ஊடகவியலாளர்கள் என கூறி வெளியேறியவர்கள் 50க்கு மேற்பட்டவர்கள்.)

நடேசன் சிவராம் போன்றவர்களின் ஊடக பணியை போற்றுபவர்கள் அல்லது அவர்களின் திறமையை அபிலாசைகளை மதிப்பவர்கள் அவர்களின் ஆத்மசாந்திக்காக செய்ய வேண்டியது ஒன்றுதான். மட்டக்களப்பில் தமிழ் ஊடகத்துறையை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும்.

**நன்றி - தினக்கதிர்**

www.thinakkathir.com

...நாட்டு நடப்பு...

# குழந்தைச் செல்வம்

வீட்டுக்கு வீடு வாசல்படி என்று எம்மவர்கள் அடிக்கடி கூறுவதை நாம் கேட்டுள்ளோம். அதாவது எல்லா குடும்பங்களிலும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும், முற்றாக எந்தவித பிரச்சினைகளும் அறவே இல்லாத குடும்பமொன்றினைக் காணுவது மிக அரிது.



ஜாதகப் பொருத்தம் பார்த்து சுப முகூர்த்த வேளையில் நடைபெற்ற திருமணங்கள் பல முறிவடைந்திருப்பதையும் நாம் அறியாமலல்ல. அதே வேளை எந்த வித சம்பிரதாயங்களும், சமய அனுஷ்டானங்களும் இடம்பெறாது பெற்றோர், உற்றார், உறவினர் ஆகியோரின் விருப்பத்திற்கு மாறாக தம் விருப்பப்படி இடம்பெற்ற திருமணம் மூலம் நல்வாழ்க்கையை வாழ்ந்து வரும் குடும்பங்களையும் நாம் அறியாமலல்ல.

அங்கு இடம்பெற்ற அந்த திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். மணமகன் கணக்காளராக முக்கிய அமைச்சொன்றில் பணிபுரிகின்றார். மணமகள் நல்ல செல்வமிக்க குடும்பத்தில் பிறந்த ஒருவர். ஜாதகப் பொருத்தம் அந்த மணமக்களிடையில் மிக சிறப்பாக அமைந்திருந்தது.

எது என்னவாக இருந்தாலும் அந்த தம்பதிகளுக்கு நீண்டகாலமாக குழந்தை பாக்கியம் இருக்கவில்லை. அவர்கள் இரு பேரும் இளசுகள் என்பதால் குழந்தையொன்றை பெற்றெடுத்து தங்களுக்கென்று ஒரு வாரிசை உருவாக்கும் எண்ணம் காணக்கிடைக்கவில்லை.

சில குடும்பப் பெண்கள் தங்களை அழகுபடுத்துவதில் முண்டியடித்து முன்நிற்பவர்கள். எங்கே? குழந்தை பிறந்தால் தங்கள் அழகு குறைந்துவிடுமோ! என்ற அச்சத்தின் நிமித்தம் குழந்தைகள் பெறுவதை தள்ளிப் போடுவார்கள். இல்லாவிடில் அறவே குழந்தைகளை பெற எந்த முயற்சியும் எடுக்க மாட்டார்கள்.

மேலும் சிலர் குழந்தை வேண்டுமென்று வரம் கேட்டு கோயில் குளம் எல்லாம் சுற்றி வருவார்கள். சிலர் இலட்சக்கணக்கான பணத்தை செலவழித்து, பாரிய சிகிச்சைகளை மேற்கொள்வார்கள்.

கணக்காளர் பதவி என்பது ஓய்வாக இருக்கக்கூடிய பதவியல்ல அதுவும் அவர் ஒரு முக்கிய அமைச்சொன்றில் பணிபுரிவதால் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் வேதனம் உள்ளிட்ட சகல கொடுப்பனவுகளுக்கும் அவரே பொறுப்புக் கூற வேண்டியவர்.

அங்கு தனியார் கணக்காய்வு திணைக்களமொன்றில் கடமைபுரியும் இளைஞன் ஒருவன், கணக்காளரின் வீட்டுக்கு அருகாமையிலுள்ள விடுதியொன்றில் தங்கி தனது அலுவலகத்திற்கு சென்று வருவான். அலுவலக நடவடிக்கைகள் தொடர்பான அறிவுரைகளை கணக்காளரின் வீட்டுக்குச் சென்று அவரிடம் கேட்டு அறிந்து வருவது வழமை.

கணக்காளரின் நிதித்துறை தொடர்பான நல்ல அனுபவம் பெற்றிருப்பதால் அந்த இளைஞனுக்கு தேவையான விளக்கங்களை அவ்வப்போது சொல்லிக் கொடுத்து வருவார். ஆனால் ஒரு நாள் அவர் அவனோடு நடந்து கொண்ட விதம் அவனுக்கு பெரும் கவலையை அளித்தது.

அன்றிரவு அவனுக்கு தூக்கமே வரவில்லை. கணக்காளரின் கீழ்த்தரமான நடத்தையைப் பற்றி பெரிதும் கவலைப்பட்டான். அன்று அவர் நடக்க முயற்சித்தமை தொடர்பாக யாரிடமும் கூறக்கூடிய சூழ்நிலையில் அவன் இல்லை. அதை எப்படி இன்னுமொருவரிடம் கூறுவது என்று தனக்குள்ளே பல கேள்விகளைக் கேட்டு யோசித்ததினால் அன்றைய அவனது இரவு தூக்கமே கெட்டுவிட்டது.

அடுத்த நாள் கணக்காளரின் மனைவி தொலைபேசி ஊடாக அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். "நேற்று இரவு என்ன நடந்தது என்றும் நீங்கள் கோபப்பட்டு புறப்பட்டுப் போனதற்கும் காரணம் என்ன? என்றும் எனக்குத் தெரியும். நான் அவருடன் சுமார் 10 வருடங்கள் குடும்பம் நடத்திப் போட்டன். அவருக்குள்ள அந்தக் குறையை என்னால் நிவர்த்தி செய்ய முடியவில்லை. பல தடவைகள் அவருக்கு அது தொடர்பில் புத்திமதி கூறியும் பலனற்றுப் போய்விட்டது. இன்னமும் அவ்விதமான பழக்கத்திற்கு அடிமையாகி கேவலமாக நடந்து வருகின்றார்.



இறைவனுடைய படைப்பில் அவருக்குள்ள அந்தத் தாகம் உலகில் பல பேருக்குண்டு. அதை தவறாக எடுத்துக்கொள்ள முடியாமலுள்ளது. நீங்களும் படித்து உத்தியோகம் பார்க்குமொருவர். அப்படியான விடயங்களை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

ஆகவே நடந்த விடயத்தை பெரிதுபடுத்தாமல் வழமைபோல் வீட்டுக்கு வந்து போங்கள். அவர் இனிமேல் உங்களிடம் அவ்வாறு நடந்து கொள்ளமாட்டார். அதற்கு நான் உத்தரவாதமளிக்கின்றேன். என மீண்டும் மீண்டும் மன்னிப்பு கேட்டுக் கொண்டார் கணக்காளரின் மனைவி.

ஆரம்பத்தில் கணக்காளரும் அவர் மனைவியும் தங்களுக்கு ஒரு குழந்தை வேண்டும் என்பதில் ஆர்வம்



இல்லாமல் இருந்தாலும் காலம் செல்ல செல்ல தங்களுக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதில் விருப்பம் காட்டினர். குழந்தைக்கான கரு ஒன்றை உருவாக்கக்கூடிய விந்து உற்பத்தி கணக்காளரிடம் மிக குறைவாக காணப்பட்டது. அது பற்றி அந்த கணவனும் மனைவியும் நன்றாக புரிந்து வைத்திருந்தனர்.

கணக்காளரிடம் இருந்த வேலைப் பழு, சமபாலர் உடனான பாலியல் ஆசை மற்றும் விந்து உற்பத்தி குறைவு போன்றவை அந்த குடும்பத்திற்கு ஒரு வாரிசை பெற்றுக் கொடுக்க பல தடைகளாக இருந்தன. அவர்களிடமிருந்த பணவசதிக்கு உள்நாட்டிலென்ன வெளிநாட்டுக்குச் சென்றும் தகுந்த மருத்துவ சிகிச்சையை பெற்றிருக்கலாம்.

ஆனால் அந்த தம்பதிகள் அதைப் பற்றி அன்று யோசிக்கத் தவறவிட்டனர். கணக்காளரினது மனைவியின் மன்னிப்பை ஏற்று அந்த இளைஞன் மீண்டும் அந்த வீட்டுக்குச் சென்று வந்தான். கணக்காளரும். அன்று அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை என சகலவற்றையும் மறந்து அவனுடன் வழமை போல் பழக ஆரம்பித்தார். அந்த வீட்டில் அவனது உறவின் நெருக்கம் மிக அதிகரித்து காணப்பட்டதன் விளைவாக கணக்காளரின் மனைவி கருவுற்றார். சில மாதங்களுக்குப் பின்னர் அந்த வீட்டில் இருந்து வந்த நீண்டகால ஏக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கணக்காளரின் மனைவி ஓர் அழகான பெண் குழந்தைக்கு தாயானார். கணக்காளர் சந்தேகப்பட்டு, சண்டை சச்சரவை உருவாக்குவதற்குப் பதிலாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அவரால் அந்த சந்தோசத்தை தாங்க முடியாது தவித்தார்.

மேலும் அவரிடம் இருந்த அனேக பாலியல் தொடர்பான அருவருப்புக் கொண்ட செயற்பாடுகள் அனைத்தையும் அவர் நிறுத்திக் கொண்டதுடன் தனது முழுக் கவனத்தையும் அந்தக் குழந்தை மேல் செலுத்தினார்.

முன்னர் ஒரு தடவை அப்பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவிய வேளையில் கணக்காளரின் குளியல் அறையை உபயோகிக்க அவரும் அவர் மனைவியும் அயலிலுள்ள பெண்களுக்கு இடமளித்திருந்தனர். ஆனால் அவர் அந்த பரோபகாரத்தனம் ஊடாக பட்டபகலில் தனது பாலியல் உணர்வை தூண்டி இரசணையை பெறுவதற்காக தனது அறையில் இருந்து கொண்டே குளியலறையில் இரகசியமாக இணைக்கப்பட்ட கெமரா மூலம் அங்கு குளிக்கும் ஒவ்வொருவரையும் கணனி ஊடாக இரசித்துக் கொண்டிருந்த தருணம் அவர் மனைவியிடம் அகப்பட்டுக் கொண்டார்.



அங்கு நடந்ததைக் கூறாமல் எப்படியோ அங்கு குளிக்க வருபர்களுக்கு சாக்குப் போக்கு கூறி குளிப்பதற்கு தடையை ஏற்படுத்தினார் கணக்கா ளரின் மனைவி. இவ்விதம் அவரின் பாலியல் சேட்டைகள் அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பட்டாலும் அவரின் அந்த தாகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

குழந்தையின் வருகைக்குப் பின்னர் கணக்காளரை கண்காணிக்க வேண்டிய அவசியம் மனைவிக்கு ஏற்படவில்லை. மனைவியுடனும், குழந்தையுடனும் தனது பெறுமதிமிக்க காலத்தை சிறப்பாக கழித்து வருகின்றார் அந்த கணக்காளர்.

ஆனால் அக் குடும்பத்தின் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு வழங்கிய அந்த இளைஞன் மேலும் அப்பகுதியில் வாழ அவனது மனசாட்சி இடமளிக்காததால் அந்த தனியார் கணக்காய்வு திணைக்களத்தின் நாவலப்பிட்டி கிளை அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டான்.

முற்றும்

- பாலையூற்றான் -

## குழந்தையை கட்டி இழுத்த தாய்



அமெரிக்கவின் டென்னீஸ் மாகாணத்தை சேர்ந்த சோனா கார்டர் ப்ரூக் என்ற மணப்பெண், தன் 1 மாத பெண் குழந்தையான ஆப்ரியை, தனது ஆடையில் கட்டி இழுத்தப்படியே எலம் பெப்டஸ்ட் என்ற தேவாலயத்தில் நடைபெறும் தனது திருமணத்திற்கு நடந்து வந்துள்ளார்.

ப்ரூக் கூறுகையில், இவ்வாறு இழுத்து சென்றதில் எவ்வித தவறும் இல்லை, நான் குழந்தையை நன்றாக கீழே விழாதபடி கட்டிவைத்தேன் மேலும் குழந்தையை இவ்வாறு சுமந்து வருவதற்காகவே தனது ஆடையை மாற்று வடிவம் செய்ததாக கூறியுள்ளார். இவரது இச்செயல் வலைத்தளங்களில் அம்பலமாகி அனைவராலும் இது ஒரு முட்டாள்தனமான செயல் என விமர்சிக்கப்பட்டுள்ளது.

## உலகின் சிறிய நாடு



இங்கிலாந்து நாட்டின் கடல்பகுதியின் அருகே வெறும் 22 பேர் மக்கள் தொகை கொண்ட ஒரு நாடு இருக்கின்றது. அந்த நாட்டின் பெயர் Sealand. 22 பேர் மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டிற்கு ஒரு அரசரும் இருக்கின்றார். தனி கரன்சியுடன் அந்த நாட்டின் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் தோன்றிய இந்த நாடு இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்பட்டாலும், அந்த நாட்டின் அரசராக தன்னைத் தானே முடிசூட்டிக்கொண்டவர் இது தனிநாடு என்று கூறிவருகிறார். இது தனிநாடாக அங்கீகரிக்கப்பட்டால் உலகின் மிகச்சிறிய நாடு இதுவாகத்தான் இருக்கும். இரண்டாம் உலகப்போரின்போது ராணுவ வீரர்கள் பாதுகாப்பிற்காக கட்டப்பட்ட இரண்டு காங்கிரீட் தூண்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட ஒரு இடத்தின் பெயர் தான் Sealand. இந்த பகுதி மக்களின் ஒரே தொழில் மீன்பிடிப்பதுதான். இந்த நாட்டிற்கென தனி கரன்சி உள்ளது. இந்த நாட்டின் பரப்பளவு 5,290 சதுர அடி ஆகும். கோடைகாலத்தில் இந்த பகுதியில் சுற்றுலாப்பயணிகள் பெருமளவு வருவதாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துணர்தல்

சிறுகதை

அனிதா திருமணம் முடிந்து கனடா வந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. அன்பான கணவன் சுரேஷ், 18 மாத குழந்தை அருண் இவர்களுடன்



வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

அனிதா நாளை விடியலை மிகவும் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். என்றும் போல் அவளை இன்று உறக்கம் ஆட்கொள்ளவில்லை. நாளை எழுந்தவுடன் அடுத்தடுத்து செய்ய வேண்டிய வேலைகளை மனதிற்குள் அசைபோட்டாள். தான் எடுத்திருக்கும் முடிவால் கணவனுக்கும், குழந்தைக்கும் எந்த வித இடைஞ்சலும் வராமல் இருக்க ஆசைப்பட்டாள். எப்போது உறங்கினாளோ?

திடீரென்று 4 மணிக்கு அலாரம் அடிக்க உறக்கத்திலிருந்து விடுபட்ட அனிதா, அதன் தலையில் பட்டென்று அடித்தாள். அவசரமாக காலைக் கடன்களை முடித்து, குளித்துவிட்டு கிச்சனில் நுழைந்தாள். இங்கு பால்காரனுக்கு காக்க வேண்டிய அவசியம் இல்லை. fridge லிருந்து பால் எடுத்து காபி குடித்தவுடன் மடமடவென்று சமையலை கவனிக்கத் தொடங்கினாள். சத்தத்தில் எழுந்த சுரேஷ், மனதிற்குள் சிரித்துக்கொண்டான். இவள் எப்படி சமாளிக்கப் போகிறாள் என்று கவலைப்பட்டான்.

சமையலை முடித்த அனிதா சுரேஷிடம் வர, மணி காலை 6.30 ஆனது. "இன்னுமா தூக்கம்? இன்றுதான் முதல் நாள் ஆபீஸ் எனக்கு நீ கிளம்புபோது என்னையும், அருணை babysister இடமும் drop பண்ணனும் சரியா?" "உன் பேச்சுக்கு மறு பேச்சு உண்டா? நீ எல்லாம் தயார் பண்ணு, நான் குளித்து விட்டு வருகிறேன்" என்றான். அனிதா அவனுக்கு வேண்டிய எல்லாம் எடுத்து வைத்துவிட்டு தூங்கும் குழந்தை இடம் வந்தாள். தூக்கத்திலே பாலைக் கொடுத்துவிட்டு ஈரமாக இருந்த துணியை மாற்றி டிரஸ்ஸையும் மாற்றினாள். இதற்குள் சுரேஷ் ரெடி ஆகிவிட்டான்.

"சுரேஷ், உன்னுடைய பிரேக்பாஸ்ட் ரெடி, சாப்பிட்டுவிட்டு அருணுக்கு வேண்டியதை அந்த பாக்ஸில் பேக் பண்ணிவிடு ப்ளீஸ், நான் இதோ ரெடி ஆகி விடுகிறேன்" என்று ரூமுக்குள் புகுந்தாள்.

நேற்றே அயன் பண்ணி இருந்த காட்டன் புடவைக்கு மேட்ச் ஆக மற்ற அணிகலன் களையும் அணிந்து வெளியே வரும் போது அருண் இன்னமும் சுரேஷ் தோளில் தூங்கிக் கொண்டிருந்தான். அனிதா, இப்பிடியே கொண்டுபோய் விட்டால் எழுந்ததும் ரொம்பவும் அமர்க்களம் பண்ணுவானே, அதெல்லாம் போகப்போக சரியாகிவிடும் சுரேஷ், என்றபடி சமைத்ததை ஹாட் பேக்கில் வைத்துவிட்டு வர மணி 7.45 ஆகிவிட்டது. சுரேஷ் அவர்களை drop செய்துவிட்டு ஆபீஸ் வந்து சேர 8.30 ஆகிவிட்டது.

வவுனியாவில் கல்யாணத்திற்கு முன்னால் ஒரு வருஷம் அம்மா எல்லாம் பார்த்துக் கொண்டதால் அனிதாவால் ஜாலியாக வேலைக்குப் போய்வர முடிந்தது. இங்கு வந்த புதிதில் பார்ட்டி, டின்னர், அரட்டை என்று பொழுது போனது. அருணும் வந்து விட்டதால் பொழுது சரியாக இருந்தது. இருவருக்கும் அருண் மேல் ரொம்ப ஆசை. அருண் சரியான அம்மா செல்லம். இந்த routine கொஞ்சம் போர் அடிக்க, அப்பப்போ எட்டிப்பார்க்கும், வேலைக்குப் போகும் ஆசை அனிதாவிற்கு இப்போ அதிகமானது.

கணவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான், "அனி, நீயே உன் friends பற்றி குறை சொல்வாய், வீட்டையும் குழந்தையும் விட்டு விட்டு அப்படி என்ன பொல்லாத வேலை என்று", இல்லை, சுரேஷ், ஐ can manage" என்றாள். அதற்கு மேல் அவன் கட்டாயப்படுத்தவில்லை. எப்படியோ இன்று அனிதா வேலைக்கு போகும் முதல் நாள்.

ஆபீஸ் போன அனிதாவிற்கு அருணைப் பற்றித்தான் சிந்தனை. எழுந்ததும் என்ன கலாட்டா பண்ணுகிறானோ, சுரேஷ் ஒழுங்காக breakfast வைத்தாரா என்று. உடனே சுரேஷுக்கு போன் பண்ணி கேட்டுவிட்டு, அருணை மறக்காமல் 1.30 மணிக்கு pick up செய்யச் சொல்லி, "நானும் ஒண்ணரை மணிக்கு வந்துடுவேன்" என்றாள். "சரி அனி, நான் இப்போ ரொம்ப பிஸி, சும்மா தொந்தரவு பண்ணாதே" என்று போனை வைத்தான்.

"சீய் இந்த ஆம்பிளைகளே இப்படித்தான், என்னடா, இன்று wifeக்கு முதல் நாள் ஆபீஸ் இல்லையா? எப்படி இருக்கு, என்ன என்று ஒரு வார்த்தைக் கேட்டால் என்னவாம்?" என்று நினைத்தாள்.

மதியம் லஞ்சுக்கு வீட்டுக்கு வந்த போது, அருண் அவளைப் பார்த்து ஒரேடியாக அழுது கட்டிக்கொண்டான். அவனை சமாதானப்படுத்தி தூங்க வைத்து, சாப்பிட்டு எழுந்த போது மணி 3ஐ தொட்டது. அவசரமாக துணியை வாஷிங் மிசினில் போட்டுவிட்டு மீண்டும் ஆபீஸ் கிளம்ப தயாரானாள்.

இரண்டு, மூன்று நாள் போனதே தெரியவில்லை. பாவம் அருண்! புது சூழ்நிலைக்கு தன்னை மாற்றிக்கொள்ளத் தெரியவில்லை. அன்று ஆபீஸ் விட்டு வரும் போதே அருண் உடம்பு சரி இல்லாததைக் கவனித்தாள். காலையில் எழுந்தபோது நல்ல ஜுரம். அனிதாவால் லீவ் எடுக்க முடியாது. "சுரேஷ் இன்னிக்கு மட்டும் வீட்டில் இருந்து குழந்தையைப் பார்த்துக்கொள்ளேன்" என்றாள். சுரேஷ், "இன்று எனக்கு முக்கியமான மீட்டிங் இருக்கு வேண்டுமானால் மருந்து, மாத்திரை எல்லாம் பேபி சிஸ்டர் இடம் கொடுத்து விடுவோம், சாயங்காலம் டாக்டர் இடம் போகலாம்" என்றான்.

அன்று ஏதோ சமைத்து விட்டு அருணை பேபி சிஸ்டர் இடம் விட்டு ஆபீஸ் சென்றாள். ஜுரம் சீக்கிரமே குறைந்தாலும், அவன் சரியாக சாப்பிடாதது வருத்தமாக இருந்தது. இப்போதெல்லாம் குழந்தையுடன் விளையாடுவதற்கோ, கொஞ்சுவதற்கோ நேரம் கிடைப்பதில்லை, என்று அனிதா ரொம்பவும் வருத்தப்பட்டாள். அதுவே அவனுக்கு ஏக்கமாககூட இருக்கும். இந்த மாதிரி பல சிந்தனை மனதில் ஓட சரியாக தூங்ககூட முடியவில்லை அனிதாவால்.

அன்று வெள்ளிக்கிழமை வீட்டில் friendsஐ dinnerக்கு invite பண்ணி இருந்தார்கள். காலையிலிருந்து வீட்டை ஒழுங்குபடுத்தி பாத்ரூம் கிளீன் பண்ணி எல்லாவற்றையும், சரிப்படுத்தி வைத்தாள். பிறகு டின்னருக்கு வேண்டியதை தயாரிக்க ரொம்பவும் திண்டாடிவிட்டாள்,

"அனி, நான் cookingல் ஹெல்ப் பண்ணட்டுமா?"
"வேண்டாம், நீ அருணைப் பார்த்துக்கொள், அதுவே பெரிசு" என்றாள்.

ஒருவழியா எல்லா வேலையும் முடித்து விட்டு, அருணுக்கும் வேண்டியதை கவனித்து guestஐ வரவேற்கத் தயாரானாள். எல்லோரும் வந்த பின்பு kitchenஇல் வேலை செய்வது, அனிதாக்கு பிடிக்காத விஷயம்.

எட்டு மணிக்கு ஒரு மாதிரி எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். ஒருவரை ஒருவர் வாரிக்கொள்வதும், இல்லாத ஒருவரின் தலையை உருட்டுவதும் ஆக நேரம் போய்க்கொண்டு இருந்தது.
"என்ன அனிதா, வேலைக்கு போக ஆரம்பித்தப் பிறகு என்னென்ன புதுசா வாங்கினாய்?" (ஆமாம், இன்னும் ஒரு மாச சம்பளமே வாங்கவில்லை, அதற்குள்.) என்ன ரொம்ப பிஸியா, ஏதாவது உதவி வேணுமா?"



இப்படி வழக்கமான கேள்விகளில ஆரம்பித்து topic எங்கேயோ போயிற்று. அனிதா மணியைப் பார்த்தாள். "my god! நாளைக்கு இருக்கே" அருண் இன்னமும் விளையாடிக் கொண்டிருந்தான். எல்லா லேடீஸுக்கும் பொறுமை போய் சாப்பிடலாமா என்றார்கள்.

"இன்னுமா இவர்கள் ட்ரிங்க்ஸ் முடியவில்லை, விட்டாப் போரும், காணாததை, கண்ட மாதிரி, ஓயமாட்டார்கள்" என்று சொல்ல அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் கூச்சலும் கும்மாளமும் ஆக டின்னர் முடிந்தது.

எல்லோரும் போனப் பிறகு வீடு இருந்த நிலையைப் பார்த்து அனிதாவிற்கு பக்கென்றது. எல்லாம் நாளைப் பார்த்துக் கொள்ளலாம் என்று போட்டது போட்டபடி தூங்கப் போய்விட்டாள். காலையில் எழுந்ததும் அனிதாவால் ஒன்றும் செய்ய



முடியவில்லை சுரேஷுக்கும் ஒரே எரிச்சலாக இருந்தது. "என்ன அனி எப்படி சமாளிக்கப் போகிறோம்" இதற்குத்தான் ஹவுஸ் பாய்க்கு ஏற்பாடு பண்ணு என்று சொன்னேன், நீ எங்கே கவனிச்ச!"

"ஹவுஸ் பாய் கிடைப்பது சுலபமில்லை என்று உனக்குத் தெரியாதா? ஓரளவுதான் என்னால் உதவி பண்ண முடியும், என்னோட ஆபீஸ் வேலை ரொம்பவும் பொறுப்பானது, தவிர டென்ஷனும் ஜாஸ்தி இதையெல்லாம் யோசித்துதான் நான் ஆரம்பத்தில் இப்போ உனக்கு வேலை வேண்டாம் என்றேன்".

சரியான சமயம் பார்த்து பிடித்தான். ஆமாம், "உனக்கு எப்போதும் இஷ்டம் இல்லை அதான்".
"இல்லை அனி, நீயும் வேலைக்குப் போக ஆரம்பித்ததிலிருந்து நிறைய விஷயங்கள் ஒழுங்காக நடக்கவில்லை. அருணின் routine ரொம்பவே மாறிவிட்டது. அவன் பேபி சிஸ்டர் இடமும் சந்தோஷமாக இல்லை. வீட்டில் நாம்தான் நிம்மதியாக சமைத்து சாப்பிட்டு இருப்போமா?, பாதி நாள் வெளியில்தான். சரி அருணைதான் உன்னால் ஒழுங்காக கவனிக்க முடிந்ததா? நீ இல்லாமல் அவன் எவ்வளவு தவிக்கிறான் தெரியுமா? அவசியமில்லாமல் நீயாய் தேடிக்கொண்ட நிலைமை இது, sorry to say this. எனக்கு ஆபீஸுக்கு நேரமாகிறது, bye" என்று கிளம்பிவிட்டான்.

அனிதா முடிந்தவரைக்கும் வீட்டை ஒழுங்குப்படுத்தி விட்டு. ஆபீஸ் கிளம்பினாள். மாலை வீடு வரும் போது ஒரு தீர்மானத்தோடு வந்தாள். அன்றிரவு சுரேஷ் அவளருகில் வந்து தோள் மேல் கை வைத்து,

"சாரி அனி காலையில் நான் அப்படிப்பேசி இருக்கக் கூடாது ஆனால் இந்த கொஞ்ச நாளில் உன்னையும் சரியாக கவனித்துக் கொள்ளவதில்லை. இப்படி எல்லோரையும் வருத்திக் கொண்டு, போலி கௌரவதிற்காக, வேலைக்குப் போகும் அவசியம் நமக்கு இல்லை. இன்னும் 2, 3 வருஷத்தில் அருண் கொஞ்சம் பெரியவனாகி விடுவான், அப்போ இது பற்றி யோசிக்கலாம். வீட்டிலேயே உன்னை பிஸி ஆக வைத்துக் கொள்ள நிறைய வழி இருக்கு. இந்த வயதில் அவனுடன் அனுபவிக்க வேண்டிய சந்தோஷத்தை ஏன் இழக்கிறாய்?".

தான் மனதில் நினைத்ததை சுரேஷ் அப்படியே கூற ஒன்றும் சொல்லாமல் இருந்தாள்.
"என்ன அனி, கோவமா?"
"இல்லை சுரேஷ், நான்தான் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டேன். என் ஆசையை கொஞ்சம் தள்ளிப்போடுவதில் தப்பில்லை. இன்னும் ஒரு வாரம்தான், பாரேன் நான் பழைய அனிதாவாக மாறிடுவேன்."
"தட்ஸ் குட்" என்றான்.

இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசியதால் பிரச்சினை லேசாகியது. மயக்கும் மாய வேலைக்கு விடுதலை கொடுக்க நிம்மதியாக உறங்கினார்கள்.

நன்றி - தமிழ் கூடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## வாய்த்திருக்கும்?

இதுவரையும் தமிழ்வளர்த்தோர் எண்ணிலாதோர்,
என்றாலும் தமிழ் வளர்த்த தாகக்காணோம்?
அதுவும் ஒரு ஊடகமே ஆதலாலே,
ஆங்கிலம் போல் வளர்த்திடலாம் கலந்தால் என்பார்!
எது வரையும் போதினிலும் வடக்குச் சொல்லில்
ஏழெட்டைச் சொருகாமல் விடவும் மாட்டார்!
புதுச் சொற்கள் ஆக்கிடவும் மாட்டார், அந்தப்
புலமை மலை மறையாரைப் போன்றும் இல்லார்!

உண்மையிலே தமிழ்வளர்த்தோர் பாவாணர்போல்
ஒரு சிலபேர் உள்ளார்கள் வெளியாரோடும்!
பன்மொழியில் வல்லுநர்கள், அதனாலே தான்
பலமொழியும் கலக்காமல் வரைந்துள்ளார்கள்!
அண்மையிலே கவனிக்கப் படாமல் போனார்
அவரையுமே போகவிட்டோம், ஆம் பாவாணர்



தாமரைத்தீவான்
ஊச்சந்தீவு - கிண்ணியா



## நிரந்தரம்

நாக்கினில் சுவையரும்புகள்
கேசங்களை நகங்களை
குளிர்மையால் அழித்து
உண்மைகளுக்காய் ஏங்கி
நாளும் எச்சில் உமிழ்நீரை
கக்குகின்றன சுகமாய்
கய்ப்பின்றி அமிர்தமாய்

பொய்மையில் அறைந்து
மெய்மையின் வரம்
வேண்டி நாவும்
நாளாந்த அசைவுக்காய்

அசைதலில் அசையாத
மாறுதல்களும் புதிதாய்
புத்துயிர்ப்பில் நிரந்தரமாய்.

திருமலை சுந்தா

## உணரவைப்போம்

புதியதோர் உலகம் காண்போம்
போரிட்டு மடிவை ஒழிப்போம்
கதிரவன் வழி செல்வோம்
கடமைகள் சரிவர செய்வோம்
காலத்தால் ஒன்று படுவோம்
வல்வினை வழக்குகள் ஒழிப்போம்
வஞ்சகர் மீது ஏறி மிதிப்போம்
உரிமைகள் பெற போராடுவோம்
உண்மைக்கு முதலிடம் கொடுப்போம்
உழைத்து வாழ பழகுவோம்
ஊதாரிகள் இல்லையென கைகொட்டுவோம்

தாய் தந்தையர் பணிவோம்
தாரத்தை என்றும் மதிப்போம்
மதுப் பழக்கத்தை அழிப்போம்
மாதர்கள் பண்பை உயர்த்துவோம்
சிறுவர் சிறுமியரை சிறக்க வைப்போம்
சீரான வாழ்வுவாழ வழி காட்டுவோம்
காமவெறியை இல்லாது விரட்டுவோம்
திருட்டு மனிதரை சிறைப்பிடிப்போம்
ஊழல் பேர்வழியை ஒதுங்கவைப்போம்
உரிமைதர மறுப்போரை ஒழித்து கட்டுவோம்
ஒற்றுமை தன்னை உணரவைப்போம்
உலகாள கை கோர்ப்போம்
சீ.என்.துரைராஜா



## படிப்பினையூட்டும் அருட்படைப்பு

மரபுக் கவிதைகள் வாசகர்கள்
மனதை ஈர்க்கும்
மழலைக் குரல்கள் மனிதர்கள்
மனதுக்கு இதமூட்டும்!

இதிகாசக் கதைகளும்
இராமாயணமும் பாரதமும்
இல்வாழ்க்கைக்கு என்றும்
ஏற்ற படிப்பினையாகும்!

அர்த்தமுள்ள இந்துமத
தத்துவக் கதைகளெல்லாம்
எந்தக் காலத்திற்கும்
ஏற்ற சொத்துக்களாகும்!


அறம் பொருள் இன்பம் யாவையும்
ஆய்வு செய்தெழுதிய
திருக்குறள் கவிதைவரிகள்
அருட்திரு அமுதப்படைப்பு

சேனையூர் மூதூர் கிழக்கு

# தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல்

பாகம் : 01

திருகோணமலையின் கலை, இலக்கிய பாரம்பரியம் பற்றிய ஆய்வுகளும் அவற்றின் வரலாற்றாதாரங்கள் பற்றிய தேடல்களும் அதிகரித்திருக்கும் இக்காலகட்டத்தில் திருகோணமலையிலுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற கிராமங்களில் ஒன்றான தம்பலகாமத்தில் இன்று முற்றும் முழுதாக மறக்கப்பட்டுவிட்ட அண்ணாவிமார்களின் காலத்தினை மீட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



ஈழத்தமிழர்களின் கலைகளில் இன்றியமையாத கூறாக நாட்டுக்கூத்து காணப்படுகிறது. இதுவரை கிடைக்கப் பெற்ற நாட்டுக் கூத்துக்களில் மிகப் பழமையானதாக 'மார்க்கண்டன் நாடகம்' 'வாளபிமன் நாடகம்' என்பன காணப்படுகின்றன. இவற்றை எழுதிய வட்டுக்கோட்டை கணபதி ஐயரின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும்.

திருகோணமலையின் நாட்டுக்கூத்து வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட முதல் ஆவணமாகக் கருதப்படுவது கூத்துக்குரிய பல பண்புகளைக் கொண்ட 'கண்டி அரசன்' நாடகமாகும். இந்நாடகம் திரு.அகிலேசபிள்ளை பிள்ளை (1853 1910) அவர்களால் 1887 ஆம் ஆண்டளவில் எழுதி முடிக்கப்பட்டதாகும். 'கண்டி அரசன்' நாடகத்துடன் தொடங்கும் திருகோணமலைப் பிரதேச நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் அவரைத் தொடர்ந்து வந்த புகழ்பெற்ற அண்ணாவியார்களாலும், நாடகக் கலைஞர்களாலும் இன்றுவரை முன்னெடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தமிழரின் புராதான கலை இலக்கிய மரபுகளைத் தன்னகத்தே கொண்டமைந்த பழம் பெருமை மிக்க ஊர் தம்பலகாமம். தம்பலகாமம் ஸ்ரீ வீரக்கோன் முதலியார் அவர்களால் 17ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' என்னும் நூல் ஈழத்திலக்கிய வரலாற்றில் தனித்துவம் கொண்டதாகும்.

தம்பலகாமத்தில் இயல், இசை, நாடகம் என்னும் அரிய கலைகளுடன் ஆயுள் வேத வைத்தியக்கலையும் இணைந்து வளர்ந்து வந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. தம்பலகாமத்து அண்ணாவிமார்களில் பலர் பிரபல சுதேச வைத்தியர்களாக விளங்கியதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இவர்கள் தம்பலகாமத்தில் உழவுவேலைகள் முடிந்து வயல்களை யெல்லாம் விதைத்த பின்பு விவசாயிகள் ஓய்வாக இருக்கும் காலத்தில் அவர்களைக் கவரும் வகையில் சங்கீதக் கச்சேரிகளை நடத்தியும்,



நாடகங்கள், கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றியும் தாங்களும் பாத்திரங்கள் ஏற்று நடித்தும் மக்களைப் பெரிதும் கவர்ந்தனர்.

தம்பலகாமம் மத்தியிலுள்ள கள்ளிமேட்டு ஆலையடி முன்றலிலும், வர்ணமேடு சமயம்மாள் கோயில் முன்றலிலும், கோவில்குடியிருப்பு மைதானத்திலும் நாட்டுக் கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. எனினும் நீண்டகாலமாக கள்ளிமேட்டு ஆலய முன்றலே அதிக நாட்டுக் கூத்துக்கள் அரங்கேறியகளமாக இருந்து வந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இடம்பெறும் நாட்டுக் கூத்துக்களுக்கான ஒத்திகைகள் நாயன்மார்திடல், சிப்பித்திடல், கூட்டாம்புளி, கரைச்சைத்திடல் போன்ற



இடங்களில் இடம்பெறு வந்திருக்கின்றன. நாட்டுக் கூத்துக்களுக்கான ஒத்திகைகளுக்கான கொட்டில்களை நாடகக் கலைஞர்களே அமைத்தனர் என்றும் அதற்கு ஏற்படும் செலவுகளை தினம் ஒரு கலைஞர் பொறுப்பேற்றுக் கொண்டனர் எனவும் அறியக் கூடியதாக உள்ளது. சில நாட்டுக்கூத்து ஒத்திகைகள் சுமார் ஒரு வருட காலத்திற்கும் இடம் பெற்றதுண்டாம். கள்ளிமேடு ஆலயடி முன்றலில் ஒருநாள் விட்டு மறுநாள் மேடையேறும் நாட்டுக் கூத்துக்களைப் பார்க்க திருகோணமலை நகரிலிருந்தும், ஆலங்கேணி, கட்டைபறிச்சான், சேனையூர், சம்பூர், சல்லி போன்ற இடங்களிலிருந்தும் வாகனங்களிலும், மாட்டுவண்டில் களிலும் இரசிகர்கள் ஒன்று கூடுவது வழக்கம். இவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது தம்பலகாமத்து உறவுகளின் வீடுகளில் தங்கியிருந்து நாட்டுக் கூத்துக்கள் முடியும் வரை பார்த்து இரசிப்பார்களாம்.



பச்சை வயல்களுக்கிடையே தென்னந்தோப்புக்கள் திடல் திடலாக அமைந்து காட்சியளிக்கும் தம்பலகாமத்தில் வயல்வேலைகள் எல்லாம் நிறைவுபெற்று விவசாயிகள் ஓய்வாக இருக்கும் காலத்தில் நடைபெறும் நாட்டுக் கூத்துகளுக்கான பயிற்சிகள் இடம்பெறும் நிகழ்வுகள் கண்கொள்ளாக்காட்சிகளாகும் என வயது முதிர்ந்த பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த ஒத்திகைகளைக் காணவும் மக்கள் திரளும் நிகழ்வுகள் அக்கால வழக்கமாக இருந்தது. சலங்கை ஒலிகளும், தாளவாத்திய இசைகளும், கலைஞர்களின் ஒத்திகைகளும் இணைந்து ஒலித்த காலமது.

தொடரும்..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

# சினிமுரசு

## ஜட்டம் டான்ஸ் போடும் ஸ்ருதி



தற்போது விஷால் ஜோடியாக 'பூஜை' படத்தில் நடித்து வரும் நிலையில் திடீரென ஒரு பாடலுக்கு நடனமாட முடிவெடுத்திருப்பதை ஆச்சயரிமாகப் பார்க்கிறது தெலுங்கு வட்டாரங்கள்.

தமன் இசையமைக்கும் 'அகாடு' படத்தில் ஸ்ருதிஹாசன் நடனத்திற்காகவே அட்டகாசமான ஒரு டியூனை அமைத்திருக்கிறாராம்.

ஹீரொயின், பாடகி, இசையமைப்பாளர் என சினிமாவில் பல அவதாரங்களை எடுத்துள்ள ஸ்ருதிஹாசன், இப்படி ஒரு பாடலுக்கும் நடனமாடி சோலோ டான்சராகவும் மாறியிருப்பதற்கான சரியான காரணம் தெரியவில்லை.

## கமலுடன் யாரும் மோத வேண்டாம்

கமல்ஹாசன் இருவேடங்களில் நடிக்கும் உத்தமவில்லன் படத்தில் அவருக்கு ஜோடியாக பூஜாகுமார், ஆண்ட்ரியா, மற்றும் பார்வதி மேனன் ஆகியோர் நடிக்கின்றனர்.

இந்த படம் குறித்து சமீபத்தில் பேட்டியளித்த நாயகி பூஜாகுமார், முதல்முறையாக தான் இந்த படத்தில் வில்லி போன்ற வேடத்தில் நடித்துள்ளதாவும் கமல்ஹாசனுடன் மோதும் கேரக்டரில் எப்படி நடிப்பது என்று அவரே சொல்லிக்கொடுத்ததாகவும் கூறினார்.



கமல்ஹாசனின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர் என்று கூறிய பூஜாகுமார், அவருடன் யாரும் மோதவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மோதலா? காதலா??



கடந்த வருடம் வெளியான மகேஷ்பாபுவின் Nennokkadine என்ற படத்தின் போஸ்டரில் அவர் கடற்கரையில் நடந்து போவது போன்றும், பின்னால் ஒரு நாய்க்குட்டிபோல் ஹீரோயின் தவழ்ந்து போவது போன்றும் வெளியானது. அதை கடுமையாக கண்டித்தார் நடிகை சமந்தா.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மகேஷ்பாபுவின் சமீபத்திய படமான அகடு குறித்தும் சமந்தா டுவிட்டரில் ஒரு கருத்தை வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். அவர் டுவிட்டில், "வெளிநாட்டு படங்களில் காப்பியடித்து வெளிவரும் திரைப்படங்களில் மிகச்சிறந்த காப்பி திரைப்படம் அகடு" என்று குறிப்பிட்டுள்ளார்.

## கத்தி நிறுத்தி வைப்பு



துப்பாக்கி படத்தை அக்ஷய் குமாரை வைத்து, ஹாலிடே என்ற பெயரில் ஹிந்தியில் ரீமேக் செய்து வந்தார். கத்தி மற்றும் ஹாலிடே படங்களின் வேலைகளை ஒரே நேரத்தில் கவனித்து வந்தார் ஏ.ஆர்.முருகதாஸ். ஹாலிடே படம் வருகிற 6-ஆம் தேதி வெளியாகவிருப்பதால் இப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஏ.ஆர்.முருகதாஸ் மும்பை சென்றுள்ளார்.

பத்து நாட்களுக்குப் பிறகே மீண்டும் கத்தி படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்பதால், இந்த இடைவெளியில் அடுத்து நடிக்க உள்ள படத்திற்கான போட்டோ செஷன் பண்ணிவிடலாமா என்ற ஆலோசனையில் இருக்கிறாராம் விஜய்.

## மீண்டும் சிக்கலில் முனி -3



முனி படத்தின் மூன்றாவது படமான "கங்கா" பலவித தடைகளுக்கு பின்னர் தற்போது ரிலீஸாகும் நிலைக்கு வந்துள்ளது.

இந்த படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா மற்றும் பிரிமியர் காட்சி நடைபெறும் விழா ஆகியவற்றுக்கு தவறாது கலந்துகொள்ளும்படி ஹீரோயின் டாப்சியை இயக்குனர் ராகவா லாரன்ஸ் கேட்டுக்கொண்டார். ஆனால் டாப்சி, இயக்குனரின் கோரிக்கையை மறுத்து, தன்னால் இந்த விழாக்களுக்கு வரமுடியாது என்று கூறிவிட்டாராம்.

டாப்சியின் தாயார், டாப்சிக்கு சிறுவயது முதல் பேய் என்றால் பயம் என்றும், அந்த காரணத்தினால்தான் அவர் விழாவில் கலந்து கொள்ள மறுக்கிறார் என்று அவருடைய தாயார் கூறினார்.

## தமன்னா - பிரசாந்



பிரசாந்த் நடிக்கும் சாஹசம் படத்தில் நடிக்க தமன்னா தற்போது ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த படத்தை பிரசாந்தின் தந்தை தியாகராஜன் தயாரிக்கின்றார்.

பல தோல்விப்படங்களை வரிசையாக கொடுத்த பிரசாந்த் இந்த படத்தையாவது கண்டிப்பாக வெற்றி பெற செய்யவேண்டும் என்பதற்காக இந்த படத்தில் முன்னணி ஹரோயினான தமன்னாவை ஒப்பந்தம் செய்துள்ளார். தமன்னா பிரசாந்துடன் நடிக்க முதலில் தயங்கினாலும், கொடுக்க ஒப்புக்கொண்ட சம்பளம் ரூ2 கோடி என்பதைக் கேட்டதும் உடனடியாக ஒப்புக்கொண்டார்.

## சினிமா குறுஞ் செய்திகள்



- **கோச்சடையான் இரண்டாம் பாகத்தில் இருந்து சௌந்தர்யா நீக்கம்**

இரண்டாம் பாகத்தில் ரஜினியே நடிப்பார் என்றும் கூறப்படுகிறது. போர்க்காட்சி போன்ற ஒருசில பிரமாண்டமான காட்சிகளை மட்டும் அனிமேஷனில் எடுக்கவும், மற்ற அனைத்து காட்சிகளையும் 3Dயில் எடுக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. படத்தை கே.எஸ்.ரவிகுமாரே இயக்குவாராம், சௌந்தர்யா இந்த படத்தில் பணிபுரிய மாட்டார் என கூறப்படுகிறது.

- **நள்ளிரவில் டேட்டிங் சென்ற சோனாக்ஷி சின்ஹா**

சோனாக்ஷி சின்ஹா தனது 27வது பிறந்தநாள் பார்ட்டிக்கு வராமல் தன்னுடைய நெருங்கிய பாய்பிரண்டுடன் இரவு முழுவதும் காரிலேயே வெகுதூரம் டேட்டிங் சென்று இருவரும் பலமணி நேரம் மனம் பேசியதாக மறுநாள் அனைவரும் தெரிந்துகொண்டனர்.

- **மும்பை தொழிலதிபருடன் விவாகரத்து. டெல்லி தொழிலதிபருடன் மறுமணம்.**

கரீ'மா கபூர் தனது கணவரான சஞ்சய் கபூரை விரைவில் விவாகரத்து செய்யப்போவதாகவும், அதன் பின் மீண்டும் டெல்லி தொழிலதிபர் ஒருவரை மறுமணம் செய்யவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

- **என் வாழ்க்கை வரலாறு புத்தகம் பலரை தர்மசங்கடப்படுத்தும்.**

சிம்பு, பிரபு தேவா மீது காதல் அதன் பின்னர் அவர்களுடன் மோதல் ஏற்பட்டு பிரிவு, கிறிஸ்துவ மதத்தில் பிறந்து காதலுக்காக இந்துவாக மாறியது போன்றன தர்மசங்கடத்தை ஏற்படுத்தலாம்

- **கொடுமைப்படுத்திய நடிகர் விஜய்**

வில்லன் விஜய் 90 அப்பாவி சிறுவர்களை கடத்தி சென்று கொடுமைப்படுத்துவதோடு அவர்களை பணயக்கைதிகளாக வைத்து அரசிடம் பேரம் பேசுவதாகவும், அவரது சதியை இன்னொரு விஜய் எப்படி முறியடிக்கிறார் என்பதுதான் கதை என்று தெரியவந்துள்ளது.

## யாமிருக்க பயமேன்

**திரை விமர்சனம்**

கழுகு படத்தில் கலக்கிய இயக்குனர் விஷ்ணுவர்தன் தம்பிதான் இந்த படத்தின் நாயகன் கிருஷ்ணா. காதலி ரூபா மஞ்சரியுடன் சென்னையில் ஆண்மை இழந்தவர்களுக்கான மருந்து விற்பனை செய்து வாழ்ந்து வருகிறார்.

ஒருநாள் ஹீரோ கிருஷ்ணாவிற்கு மர்ம லெட்டர் ஒன்று வருகிறது. அந்த லெட்டரில் கொல்லி மலையில் தனது குடும்பத்தாரின் பூர்வீகச் சொத்து ஒன்று இருப்பதாகவும் அந்த சொத்தை கைப்பற்ற கருணாவை தொடர்பு கொள்ளவும் என்று எழுதி இருக்கிறது. இதனால் கிருஷ்ணா மற்றும் ரூபா சொத்தை கைப்பற்ற கொல்லி மலைக்கு செல்கின்றனர்.



அங்கு தனது பூர்வீக சொத்து பாழடைந்த பங்களாக இருப்பதையும், அதை கருணாவும், ஓவியாவும் பராமரிப்பதை அறிந்துகொள்கின்றனர். பின்னர் நான்கு பேர்களும் சேர்ந்து அதை ஒரு லாட்ஜாக மாற்றுகின்றனர். அந்த லாட்ஜில் தங்குபவர்கள் திடீர் திடீரென மர்மமான முறையில் மரணம் அடைகின்றனர்.

மரணம் அடைந்தவர்கள் குறித்து எவ்வித தகவல்களையும் போலீசிடம் சொல்லாமல் சடலத்தை அவர்களே புதைத்து யாருக்கும் தெரியாமல் மறைத்துவிடுகின்றனர். ஆனால் போலீஸ் கிருஷ்ணாவை அழைத்து பிணங்கள் புதைத்த இடத்தில் புதையல் இருப்பதாக சந்தேகம் கொள்கின்றனர். இதனால் பயத்தில் கிருஷ்ணா, அங்கு உண்மையில் புதையல் இல்லை என்றும் தாங்கள் புதைத்த பிணங்கள்தான் இருக்கின்றது என்றும் சொல்கின்றனர். ஆனால் புதைத்த இடத்தில் பிணங்கள் இல்லை. மாயமாய் மறைந்துவிடுகிறது.



அதன்பின்னர் தாங்கள் புதைத்த அனைவரும் பல ஆண்டுகளுக்கு முன்பே மரணம் அடைந்தவர்கள் என்றும், பேய் வடிவில் அவர்கள் வந்துள்ளனர் என்றும் அறிந்து அதிர்ச்சி அடைகின்றனர்.

இறந்தவர்கள் யார்? அவர்கள் எதற்காக மீண்டும் வந்தார்கள்? என்பதை சஸ்பென்ஸ் கலந்த காமெடி படமாக சொல்லிருக்கிறார் இயக்குனர் டி.கே.

கிருஷ்ணா நடிப்பில் அசத்தியுள்ளார். டபுள் மீனிங் வசனங்களை அசால்ட்டாக பேசுகிறார். ரூபா இவருக்கு சரிக்கு சமமாக ஈடுகொடுத்து நடித்துள்ளார். பாடல் காட்சிகளில் கவர்ச்சியில் நனைகிறார். ஓவியாவை வழக்கம்போல் இந்த படத்திலும் சரியாக பயன்படுத்தவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

திரில்லர் படத்தை காமெடியுடன் நகர்த்திய இயக்குனரை கண்டிப்பாக பாராட்ட வேண்டும். படம் ஆரம்பம் முதல் இறுதி வரை போரடிக்கவே இல்லை. பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டலைட் இணைய வசதி

கூகுள் நிறுவனம் னுசழநெ வகை சிறிய ரக விமானங்களைப் பயன்படுத்தி இணைய வசதியை வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகிருந்தது.



இந்நிலையில் தற்போது சட்டர்லைட் தொழில்நுட்பத்தின் மூலம் இணைய வசதியினை வழங்க கூகுள் நிறுவனம் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்யும் கூகுள் நிறுவனம் 180 சட்டர்லைட்களை விண்ணில் நிலைநிறுத்தவுள்ளதுடன், அவை தற்போதுள்ள ஏனைய சட்டர்லைட்களை விடவும் பூமியிலிருந்து குறைந்தளவு உயரத்திலேயே காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வியக்க வைக்கும் அப்பிள்



தொழில்நுட்ப உலகில் முன்னணியில் இருந்து வரும் அப்பிள் நிறுவனம் இதுவரையிலும் 800 மில்லியன் வரையான iOS சாதனங்களை விற்பனை செய்துள்ளது.

இதில் கடந்த வருடத்தில் மட்டும் 130 மில்லியன் புதிய வாடிக்கையாளர்களை அப்பிள் நிறுவனம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஆரம்பமான 2014ம் ஆண்டிற்கான Worldwide Developer Conference நிகழ்விலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 400 மில்லியனுக்கும் அதிகமானவை iPhone கள் எனவும், 200 மில்லியன் வரையானவை iPad கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## The Moon House தரையிறங்குகின்றது



கடந்த 2003ம் ஆண்டில் சுவீடன் நாட்டை சேர்ந்த கலைஞரும் தொழிலதிபருமான மைக்கேல் ஜென்பர்க் என்ற நபர் நிலவில் வீடு அமைக்கும் பணியை தொடங்கியுள்ளார்.

கார்பன் கட்டமைப்பின் மீது இதற்கென தயாரிக்கப்பட்ட சிறப்பு துணி கொண்டு இந்த வீடு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் நிலவில் சென்று இறங்கியவுடன் வாயுவினால் இந்த கூடாரத்தை நிரப்பிய பின்னர் சில நிமிடங்களில் இந்த வீட்டின் கட்டமைப்பு சுயமாக உருவாகிவிடும்.

சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் செய்யப்பட்டுவரும் இந்த வீடானது சுவீடன் நாட்டில் காணப்படும் சிறிய குடிசை வீட்டை ஒத்திருக்கும். நாசாவையும் தங்களின் தொழில்முறை பங்குதாரர்களாகக் கொண்ட அஸ்ட்ரோபோடிக் என்ற அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் இந்த வீட்டை நிலவுக்கு எடுத்துச் செல்ல இணைந்துள்ளது.

## 07 அங்குலத்தில் ஸ்மார்ட் போன்

Galaxy W எனும் 7 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசியினை சம்சுங் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவற்றின் திரை 1280 x 720 Pixel Resolution உடையதாகவும் HD தொழில்நுட்பத்தினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. மேலும் 1.2Ghz வேகத்தில் செயற்படக்கூடிய Quad Core Processor, பிரதான நினைவகமாக 1.5GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளன.



இவை தவிர கூகுளின் Android 4.3 இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக இருக்கும் இச்சாதனத்தில் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

## வாழத்தகுந்த – கோள்




பூமியை விட 17 மடங்கு எடையும், இரண்டு மடங்கு பெரியதுமான கெப்ளர்-10 சி என்ற புதிய கோள், ஹார்வர்டு ஸ்மித்சானியன் வானியல் பவுதிக மையத்தை சேர்ந்த சேவியர் னடஸ்கியூ இனால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 6 டிரில்லியன் மைலில் உள்ள இந்த புதிய கோளின் சுற்றளவு 18 ஆயிரம் மைல்கள் ஆகும். இந்த கோள் 45 நாட்களுக்கு ஒரு முறை சூரியனைப்போன்ற ஒரு நட்சத்திரத்தை சுற்றி வருகிறது என தெரியவந்துள்ளது.

மேலும் இந்த கோளில் வாழ்வதற்குறிய சாதகமான அத்தனை அம்சங்களும் நிறைந்துள்ளதாக, மற்றொரு விஞ்ஞானியான டிமிட்டர் சாஸ்செலோவ் தெரிவித்துள்ளார்.

## பெரிய ஸ்கிரீனில் வேண்டுமா!



இந்த பதிவு ஜிமெயில் பற்றியது. இப்பொழுது வந்திருக்கும் புதிய ஜிமெயில் "COMPOSE" வடிவம் மூலம் ஒரு சிறிய விண்டோ ஓப்பன் ஆகும்.

இதனை பெரிதாக்க, எப்பொழுதும் ஓப்பன் செய்யும் போது "COMPOSE" கிளிக் செய்து வலது ஓரத்தில் இருக்கும் "DROPDOWN ARROW" கிளிக் தேர்வு செய்து "DEFAULT TO FULL-SCREEN" தேர்வு செய்து கொள்ளுங்கள்.

## புகைத்தல் – Quitbit




புகைத்தல் தொடர்பாக எவ்வளவு தான் அறிவுறுத்தினாலும், புகைத்தலுக்கு அடிமையாகுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இவ்வாறானவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், புகைத்தலின் அளவை கட்டுப்படுத்தும் பொருட்டும் தற்போது Quitbit எனும் சாதனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்மார்ட் லைட்டர் என்று அழைக்கப்படும் இது ஒருவருடைய புகைத்தல் தொடர்பான தகவல்களை தரக்கூடிய விசேட அப்பிளிக்கேஷனைக் கொண்டுள்ளது.

# ஒரு கொலையின் கதை

2-15

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அசாத்திய மௌனம் குடிகொண்டிருந்த அந்தக் கணத்தில்...... காற்றின் அலைவில் அந்தக் கிழந்த பை ஏற்படுத்திய சத்தங்கள் என்றோ ஊசலாடிப் பிரிந்த உயிரின் அவலத்தை மீள அந்த அறைக்குள் ஏற்படுத்திக்கொண்டிருந்தது.....

(14)

........................................................................................

கறை படிந்த உடைகளைக் கைப்பற்றியதுடன் அவர்களின் பணி அந்த வீட்டில் நிறைவு பெற்றது....

அவ் வீடடின் உரிமையாளர் அந்தப் புலனாய்வாளர்களை மிகவும் ஏக்கத்துடன் பார்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.... அந்த ஏக்கப்பார்வையில் தொக்கி நின்ற கேள்வியும் எதுவெனப் புலனாய்வாளர்கள் புரிந்து கொண்டார்கள்..

மெதுவாகத் தொண்டையைக் கைனத்த புலனாய்வாளர் ஒருவர் அவரது கேள்விக்கான விடையை அளிக்கத்தான் தயாராயிருப்பதை அங்கிருந்தோர்க்கு அறிவித்தார்.

" மன்னிக்க வேண்டும்... இன்று உங்களுடைய வீட்டின் திறப்புக்களைக் கையளிப்பதற்கு முடியாது. இப்போது தான் முதலாவது பரீட்சிப்பு முடிவடைந்துள்ளது. மேலும் ஏதேனும் சந்தேகங்கள் எழும்போது நாங்கள் மீண்டும் இந்த விடுடைப் பரிசோதிக்க வேண்டும். அவ்வாறு எல்லாப் பரீட்சிப்பும் முடிந்த பிறகே வீட்டை உங்களுக்கு தரமுடியும்... இப்போது வீட்டைக் கையளிப்பது தொடர்பாக எந்த நடவடிக்கையையும் நம்மால் மேற்கொண்ண முடியாது".... திட்டவட்டமாக அவரது வார்த்தைகள் நிறைவிற்கு வந்தன....

அவர்கள் அங்கிருந்து அகன்றார்கள்.....

புலனாய்வாளர்களின் எண்ணமெல்லாம் அடுத்த தடயங்களைத் தேடிப் பயணிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது... வீட்டுரிமையாளரோ வலிசுமந்த நெஞ்சுடன் வருமானமொன்றை இழந்துவிட்ட சிந்தனையுடனும் அமைதியாக நடந்து வெளியேறினார்.

தமது வாகனத்தில் ஏறிய பின்னர் சாதாரணமான கையசைப்புடன் அங்கிருந்து அவர்கள் பயயணிக்கத் தொடங்கியவுடன் உயிர்த்தது அவர்களது தொடர்பாடற்கருவி....

தாங்கள் கைப்பற்றிய முக்கிய தடயங்களான உடைகள் தொடர்பாக அவர்கள் தமது அதிகாரியான உதவிக் காவல்துறை அத்தியட்சகருக்கு அறிவித்தனர்.... அவர் அவர்களுக்கான தனது தலைமையகத்தில் காத்திருப்பதாகத் தெரிவித்தார். அந்த வண்டி தலைமையகம் நோக்கிப் பயணமானது...

காவல்துறை அலுவலகத்தில் முறைப்படியான மரியாதைணை அவர்கய் அந்த விறல் மிக்க உதவிக் காவல்துறை அத்தியட்சருக்கு அளித்தனர்.

அவரின் முன்னேயிருந்த மேசையில் மென்துணியொன்று விரிக்கப்பட்டு அந்த உடைகள் விரிக்கப்பட்டன. அவற்றில் வீழ்ந்திருந்த ஒவ்வொரு கறுப்புப் புள்களையும் அவர்கள் பூதக்கண்ணாடியின் துணைகொண்டு மேலும் ஆராய்ந்தார்கள். அக் கறுப்புப் புள்ளிகளைத் தவிர வேறு எந்த அடையாளங்களும் அங்கு மாட்டவில்லை... ஆனால் பூதக்கண்ணாடி வெளித்தெரிந்த பெருத்த கறுத்துப்புள்ளிகளைத் தவிரவும் வேறு சில நுண்ணிய கறுத்தப் புள்ளிகளின் சிதறலை அந்த உடையில் வெளிக்காட்டியது.

நுணுக்கமான அந்த ஆராய்வின் பின்னர் அச் சான்றுப் பொருட்கள் நீதிமன்றத்துக்கு முன்னிலைப் படுத்தப்படுவதற்காகப் பொதியிடப்பட்டன....

உதவிக் காவல் அத்தியட்சகரும், அவ்விரு புலனாய்வாளர்களும் தட்டுக்களில் தமது மதிய உணவை நிரப்பிக் கொண்டு மேசையொன்றில் கூடினர்.....

தனது வாய்க்குள் பேசுவதற்குத் தேவையான அளவு இடைவெளியை வைத்துக் கொண்டு அத்தியட்சகர் மதிய உணவை உள்ளே தள்ளினார்....

"அடுத்த திட்டம் என்ன...?" "அடுத்தது... ஒருவரின் நண்பர்களைச் சந்திக்கலாம் என்று இருக்கின்றோம்......"

"சந்திப்பா?..... " என்ற கேள்வியுடன் மெல்லிய முறுவலொன்று அத்தியட்சகரின் வாயில் பூத்தது.

"நிச்சயமாக நாம் அவர்களைச் சந்திக்கத்தான் போகின்றோம் என நினைக்கின்றேன்... அவர்களைக் கவனிக்கப் போகவேண்டிய தேவை இருக்காது" என்றார் புலனாய்வாளர்.

சந்திப்பு என்பதன் அர்த்தமும் கவனிப்பு என்பதன் அர்த்தமும் அவர்களது தொழில் மொழியில் இரு வேறு அர்த்தங்களைக் கொண்டிருந்தன....

"எவ்வாறு இவ்வளவு உறுதியாக அவர்களைச் சந்திக்கத்தான் வேண்டி வரும் என்கிறாய் தோழனே?" அத்தியட்சகரின் கேள்வி தொடர்ந்தது...

ஒரு மிடறு தண்ணீரை வாயக்குள் நிறைத்து விழுங்கிக் கொண்டு அவர் அதற்குப் பதிலளித்தார்....

" டொடி கைதான விடயம் அவனது நண்பர்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கின்றது... செய்திப்பத்திரிகையில் வந்திருந்த டொடியினதும் அலிகவினதும் படங்களுடன் கூடிய செய்தியைக் கொண்ட பத்திரிகைகளை அவர்கள் இருவரும் இன்னும் பலருடன் காட்டிக் கதைத்ததை எமது பிரதேசப் புலனாய்வாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்... அத்துடன் அதற்குப் பின்னர் அவர்கள் இருவரும் தமது இடங்களை விட்டு சந்தேகத்திற்கிடமான எநதவொரு நகர்வையும் மேற்கொள்ளவும் இல்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.... ஆகவே அவர்கள் நாம் கேட்பதற்குப் பதிலளிக்கும் மனநிலையைக் கொண்டிருப்பார்கள்..... எனவே....." அவர் நிறுத்த அத்தியட்சகர் தொடர்ந்தார்.... " கவனிக்க வேண்டிய தேவை இருக்காதுதான்...... "

அவர்களுடைய சம்பாசனை அத்துடன் முடிந்தது... தட்டில் பெரும் பகுதி காலியாகிவிட்டது...

களணி காவல்துறைப் பிரிவுக்குட்பட்ட அந்தத் தொடர்பாடல் நிலையம் அன்றைய தினம் சற்று மந்தமாகவே இயங்கிக் கொண்டிருந்தது பொலவே அவர்களுக்குப் பட்டது.... அது தொடர்பாடல் நிலையம் என்றாலும்கூட அங்கு பாடசாலைப் பொருட்கள், தொலைபேசி உதிரிப்பாகங்கள், லெமினேட்டிங், படப்பிரதி போன்ற பல சேவைகளும் இருப்பதை கண்ணாடிக் கதவுகளில் இடப்பட்டிருந்த விளம்பர எழுத்துக்கள் தெளிவாக்கிக் கொண்டிருந்தன...

அவாகள் இருவரும் அக்கடையினுள் எவ்வித தயக்கமுமின்றிப் பிரவேசித்து நூறு ரூபாய்க்கு மீள் நிரப்பு அட்டையைக் கேட்டார்கள்..... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

# அன்பும் வன்பும்



(வி.என்.சந்திரகாந்தி)

வெளிநாட்டில் உறவு முறைகள் எல்லாம் காற்றில் காற்றாடி போல பறக்கின்றன…….. ஆடையை மாற்றுவது போல வாழ்க்கைத் துணையை மாற்ற முற்படுவதால் முந்திய முந்திய தாரத்து பிள்ளைகள் தந்தை தாய்க்கு 'ஹாய்' சொல்லிவிட்டு தம் போக்கில் போய்விடுகின்றனர். அது ஒன்றும் பெரிய ஆச்சரியம் அல்ல!

ஆனால் எமது கலாச்சாரம் இன்னமும் அடியோட அழிந்து போய்விடாதபடியால் எமக்கான உறவுகளான தாய்-தந்தை, அக்கா-தங்கை, அண்ணன்-தம்பி, மைத்துனன்-மைத்துனி, மாமா-மாமி, அண்ணன்-அண்ணி என்று இரத்த உறவுகள் அனைத்தும் எம்மைச்சுற்றி அரண் வகுத்து நிற்கின்றன… எமக்கு ஒன்றென்றால் இந்த உறவுகள் துடி துடித்து விடும். அதுவே அன்பு!

கணவனானவனுக்கு மனைவியின் சேவைகிட்டுவதில் சிறு தடங்கல் ஏற்பட்டால் தாயோ, சகோதரியோ, மைத்துனியோ கூட அன்புடன் அதனை ஈடுசெய்து விடுவர். அதே போல் மனைவிக்கு கணவனின் சேவையில் சிறு தடங்கல் ஏற்பட்டால் அதனை அண்ணன், தம்பி, மைத்துனன் கூட அன்புடன் முன்வந்து நிறைவு செய்வார்.

இவ்வாறு ஒரு உறவுக்கு ஒரு துன்பம் என்றால் பள்ளம் நோக்கி பாயும் நீர் போல மற்ற மற்ற உறவுகள் அன்புடன் பாய்ந்து வந்து கைகொடுப்பர்.

வாழ்வில் நாம் எத்தனை எத்தனை பிரச்சனைகளை சந்திக்கின்றோம்……..

வருமான பற்றாக்குறை…. வாடகை வீட்டுப் பிரச்சனை….. மனைவிக்கான ஆடை அணிகளை ஈடுசெய்தல்…… குழந்தைகளின் படிப்புச்செலவு……… தனியார் வகுப்புக்கள்…. குடும்ப அங்கத்தவர்களின் வருத்தம் துன்பங்கள்……

இப்படியான சவால்களிலிருந்து எம்மை நொடியில் மீட்டுவிட எம் மேல் அன்பு செலுத்தும் சொந்தங்கள் அல்லவா எமக்கு துணைபுரிகின்றன….. எத்தனை எத்தனை உதவிக்கரங்கள்…. அன்பளிப்புக்கள்……. கரிசனைகள்……!

எமது குழந்தைகளின் பிறந்தநாள் விழா ஒன்றின் போது அந்த சொந்தங்கள்…… புதிய சட்டைகள் தைத்தல்….. வீட்டை மெருகேற்றல்……. 'ஐசிங் கேக்' செய்தல்…… 'ஹப்பி பேர்த்டே' கீதம் இசைத்தல்…. கேக் வெட்டுதல் என்று வெளிப்படையாகவே களத்தில் இறங்கி அமர்களப்படுத்தி விடுவர்….!

இத்தனைக்கும் மத்தியில் நாம் விழிப்பாக இருக்க வேண்டிய விடயம் எமது உறவினர்களில் யார் எம் மேல் அன்புக்கு பதில் வன்பு செலுத்துகிறார்கள் என்பது……!

வன்பு என்பது கோபம், அசூயை, பகை ஆகியவற்றின் பாற்பட்டது. எம் மேல் வன்பு செலுத்தும் உறவினர்கள் தம்மை இலகுவில் அடையாளம் காட்டிக் கொள்ளமாட்டார்கள்… எம் மேல் வாரப்பாட்டுடன் இருப்பது போல நடிப்பர். ஆனால் இலகுவில் எங்களுக்கு எதனையும் ஈயவோ அல்லது எங்களுக்கு ஒத்தாசை புரியவோ முன் வரார்.

அக்காள் புருஷன்…. அண்ணா பெண்சாதி……. இவர்களுடன் நாம்தான் அன்பாக இருந்து அவர்களை கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டும். அதே போல் வெளிக்குடும்பங்களில் விவாகம் செய்த எமது மாமா….. சித்தப்பா போன்ற உறவுகளும் நீண்டகாலப் போக்கில் எம் மீதான அன்பை இழந்து விடுவர். மற்றவர்கள் நாசமாகப் போவதன் மூலம் தாம் பெரிதாக சாதித்துவிட்டதாக காட்ட முயலும் சிலரும் இந்த வகையில் அடங்குவர்.

எனது நண்பர் ஒருவர் தனது மகளுக்கு வரன் பார்க்கும் பொறுப்பை யாழ்ப்பாணத்தில் இருக்கும் அவரது சகலனிடம் ஒப்படைத்துவிட்டு காத்திருந்தார். அங்கே பொருத்தம் பார்க்கின்றேன்…. இங்கே பொருத்தம் பார்க்கின்றேன்…. 'டாக்டரை' பேசுகின்றேன், 'இன்ஜினியரை' பேசுகின்றேன்….. எழுபத்தைந்து வீதம் பொருத்தம்…… தொண்ணூறுவீதம் பொருத்தம் என்றெல்லாம் நல்ல செய்திகள் வரும். ஆனால் விவாகம் நடக்காது! நண்பரும் தனக்கு தெரிந்த இடங்களை சகலனுக்கு சிபார்சு செய்வார். அவரும் அவ்விடங்களைப் பாரத்துவிட்டு அவை மோசமான குடும்பங்கள்…. எமது தராதரத்திற்கு சரி வுராதவை என தட்டிக் கழித்து விடுவார்.

மகளும் இறுதி பரீட்சை முடிந்து 'கம்பஸ்'சால் வந்து விட்டாள். நண்பர் என்னிடம் முறைப்பட்டார். நானும் அவருக்கு சில ஆலோசனைகளை வழங்கினேன். அதன் பிரகாரம் அவர் சகலனுடன் எந்த விதத்திலும் தொடர்பு வைக்காமல் இரகசியம் காத்து கலியாண பேச்சுவார்த்தையை தொடங்கினார். முதலாவது பேச்சுவார்த்தையே விவாகத்தில் முடிந்தது.

விழிப்புடன் இருந்து விரைந்து செயல்பட்டால் எம்மை யாரால்தான் தோற்கடிக்க முடியும்!

# தேசிய செய்தித் துளிகள்

- **உ.த பரீட்சை வினாப்பத்திரத்தில் …**

உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள் தயாரிக்கும் நடவடிக்கையில் தான் தலையீடு செய்ததாக நிரூபித்தால் முழு பாராளுமன்றத்திலும் பகிரங்கமாக மன்னிப்புக்கோரத் தயாராகவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பரீட்சை நடவடிக்கைகள் அரசியல் மயமாவதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை யெனக் குறிப்பிட்ட அவர், தனிப்பட்ட தேவைகளுக்காக அப்பாவி மாணவர்களைப் பலியிட வேண்டாம் எனவும் சபையில் கூறினார்.

- **பதியப்படாத பள்ளிவாசல்கள்…**

பதிவு செய்யப் படாதிருக்கும் பள்ளி வாசல்கள், மத்ரஸாக்கள் மற்றும் ஸாவியாக்கள் அனைத்தையும் தாமதமின்றி பதிவு செய்துகொள்ளுமாறு வக்பு சபையின் தலைவர் அஹ்கம் உவைஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவை அமையப்பெற்ற காணி உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் அவற்றினது பெயரிலேயே இருக்க வேண்டும். அவ்வாறானவை மாத்திரமே பதிவுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

- **இந்திய பிரதமர் மோடியுடன் பேச்சு**



புதிய இந்திய பிரதமராக மோடி பதவியேற்ற பின்னர் மறுநாள் டெல்லியில் நடைபெற்ற மஹிந்த விற்கும் மோடிக்கும் இடையிலான சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் 13வது திருத்தச்சட்டம் குறித்து இந்தியா விற்கு தெளிவுபடுத்தப்பட்டதாக கூறினார்.

- **வடக்கில் இராணுவத்திடமிருந்த 18000 ஏக்கர் காணிகள்**

வடக்கில் இராணுவம் நிலை கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான காணிகளில் சுமார் 18 ஆயிரம் ஏக்கர் காணிகள் உரிமையாளர்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தின் பணிப்பாளரும். இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

- **ஆதாரம் சேர்க்க நாள் குறிப்பு**

இராணுவ முகாமில் தடுப்பிலுள்ள கிளிநொச்சியை சேர்ந்த பாலேந்திரன் ஜெயகுமாரி (52), கிளிநொச்சி மகாதேவா சிறுவர்கள் இல்லத்தில் பராமரிப்பிலுள்ள விபூசிகா (13) ஆகியோர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களுக்கு ஆதாரம் சேர்ப்பதற்கு உயர் நீதிமன்றத்தினால் திகதி குறிக்கப்பட்டுள்ளது.

# குறுக்கெழுத்து புதிர் 012

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 13 | | 14 | | 2 | 15 |
| 3 | | ■ | | ■ | 4 | | | |
| 5 | | | | ■ | 6 | | | |
| 7 | | | ■ | 8 | | | | ■ |
| | ■ | 9 | | | | | ■ | 16 |
| | ■ | | ■ | 10 | | 17 | | |
| 11 | | | 18 | | ■ | | ■ | |
| | ■ | | | ■ | | | ■ | |
| | ■ | ■ | | ■ | | 12 | | |

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ.
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத் திகதி : 05.06.2014**

**, IkpUeJ tykhf**

1. முல்லா ஓமரின் நாடு
2. எதிர்த்தரப்பினரை ந ீதிமன்றில் சுறிக்கும் சொல் – இடமிருந்து வலமாக
3. வானத்தின் ஒத்த சொல்
4. இடியுடன் இதுவும் தோன்றும்
5. இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் –குழம்பியுள்ளது
6. ஆறுப்பதற்கு பயன்படும் – குழம்பியுள்ளது
7. இராசிகளில் ஒன்று
8. கள்ளக் குணம்
9. பரோபகாரி – குழம்பியுள்ளது
10. சாதாரண தரப் பர ீட்சையில் குறைந்த பெறுபேற்றைக் கொண்ட பாடம்
11. கலக்கத்துடன் இது வரும் –குழம்பியுள்ளது
12. ம ுக்கு ஒத்தசொல்

**NkypUeJ fohf**

1. இது போனால் உடல் சடலமாகும்
13. மச்சாளின் ஒத்த சொல் – க ீழிருந்து மேலாக
14. இந்தியாவின் பிரபல்யமான ஆறு
2. நாளைக் குறிக்கும் ஒத்த சொல்
15. குறும்பான சிறுவருக்கு இது முளைக்கும்
7. மனிதத்தலையுடன் தொடர்புடைய ம ீனின் பெயர்
8. நாரதரின் வேலை
9. சுடலைக்குப் பொறுப்பானவன்
16. கடுங்கோபம்
17. முன்னொரு காலத்தில் மக்களைத் திரட்டப் போடப்படும் சத்தம்
18. யானையின் ஒத்த சொல்

## குறுக்கெழுத்து புதிர் 011 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ரை | யு | ம் | 2 த | லை | 17 வி | ■ | 18 சை |
| 15 து | 16 ச | ■ | ■ | ட | 3 தி | சை | 19 கு | 25 கை |
| ள் | 4 பா | வை | ■ | த | 5 கி | ண | று | வி |
| ளி | ஷ் | 6 வி | க | ட | க | வி | க் | னை |
| 21 டி | ட் | 7 கு | ர் | 24 ஆ | ன் | 23 மா | கெ | ■ |
| 8 ப | ன் | றி | ■ | க | ■ | 9 வி | ழு | து |
| ன் | ■ | ஞ் | 26 வா | ■ | 10 க | லை | த் | 20 கு |
| ■ | 12 ரு | சி | 13 ச | ளி | ■ | 22 போ | து | டு |
| 11 வெ | டி | ■ | ம் | ■ | 14 பா | தை | ■ | சொ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. கோழி முட்டையிலிருந்து குஞ்சு பொரிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
 1. 18 நாட்கள் 2. 21 நாட்கள் 3. 20 நாட்கள் 4. 19 நாட்கள்

2. மிகத் தூரத்திலுள்ள இரையைக் கண்டு அதனைப் பிடிக்கும் ஆற்றல் கூடுதலாக உள்ள பறவை எது?
 1. கொக்கு 2. தேன்குருவி 3. கழுகு 4. மழைக்குருவி

3. முட்டைகளை அடைகாத்து குஞ்சு பொரிக்காத பிராணி
 1. காகம் 2. பருந்து 3. தேன்சிட்டு 4. முதலை

4. உப்பை போட்டு வைக்க பொருத்தமான பாத்திரம் எது?
 1. அலுமினியப்பாத்திரம் 2. கண்ணாடிப் பாத்திரம்
 3. எவர்சில்வர் பாத்திரம் 4. பித்தளைப் பாத்திரம்

5. பருகுவதற்கு பால் பக்கற்றை திறப்பதற்கு முன், மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது?
 1. காலாவதியாகும் தினம் 2. உற்பத்தி செய்த தினம்
 3. உள்ளடக்கப்பட்ட பாலின் அளவு 4. பாலில் அடங்கியுள்ளவை

6. கொழுக்கட்டை தயாரிக்கும் போது பயன்படுத்தும் வித்து
 1. கௌபி 2. பாசிப்பளறு 3. ஆசணிப்பலா 4. பலாக்கொட்டை

7. வலைப்பந்தாட்டக் குழுவிலுள்ள ஆட்டவீரர் தொகை (பதிலாட்டக்காரரைத் தவிர)
 1. 6 2. 7 3. 8 4. 9

8. இலங்கையிலுள்ள தேசியக் கொடியை சுற்றி வர நான்கு பக்கங்களிலும் உள்ள மஞ்சள் நிறக் கீற்று பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கும்?
 1. இந்து சமுத்திரத்தால் சூழப்பட்ட நாடு என்பதை
 2. நாட்டில் வாழும் சகல இனங்களின் ஒற்றுமையை
 3. நாட்டில் முக்கிய இனங்கள் நான்கு உள்ளன என்பதை
 4. நாட்டில் நான்கு மதங்களை உள்ளன என்பதை

9. உணவு நஞ்சடையும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?
 1. மண்பாத்திரங்களில் உணவு சமைத்தல்
 2. பீங்கான் பாத்திரங்களில் உணவு பரிமாறுதல்
 3. அலுமினியப் பாத்திரங்களில் புளிப்பான உணவைச் சமைத்தல்
 4. சமைத்த உணவு வகைகளை நன்றாக மூடி வைத்தல்.

10. மருந்து கொள்கலன்களினுள்ளே நீராவியை உறிஞ்சுவதற்காக பயன்படுத்தும் பதார்த்தம்
 1. கல்சியம் 2. இரும்புத்துகள் 3. செப்புசல்பேற்று
 4. சிலிக்காஜெல்

11. 100செ.மீ நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 1.5செ.மீ நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5செ.மீ வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

12. தந்தையிடம் உள்ள காணியில் 2/10 பங்கை மகனுக்கும் 3/5 பங்கை மகளுக்கும் கொடுத்தால் தந்தையிடம் எஞ்சியுள்ள காணி என்ன பங்கு?

13. ஓர் இனிப்புப்பான போத்தல் மூன்று பேரை உபசரிக்கப்போதுமானது ஆகம். 22 பேரை உபசரிக்க தேவையான இனிப்புப்பான போத்தல்களின் எண்ணிக்கை யாது?

14. 6 எலுமிச்சைப் பழங்களில் 250 மி.லீ குளிர்பானம் பெறலாம். 2 லீற்றர் குளிர்பானம் பெற எத்தனை எலுமிச்சம் பழங்கள் தேவை?

15. 1500 மி.லீ கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900 மி.லீ நீர் உள்ளது. அப்பாத்திரதில் மேலும் 900 மி.லீ நீரைக் கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

<u>கீழ்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்குக.</u>

கோண கோண மலையேறி
 கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
 உதைச்சானய்யா சின்னத்துரை

பொட்டுப் பொட்டா கையெழுத்தாம்
 பொன் பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு சோறு போடும்
 ஐயா கணக்குப்பிள்ளை

பாட்டுக்குப் பணிய லயம்
 பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்கு பீலிக்கரை
 வாச்சுதடா உந்தனுக்கு

திண்ணயத் திண்ணய கூட்டுங்களேன்
 தெருவுத் திண்ணய கூட்டுங்களேன்
நம்மையா கங்காணி சாஞ்சிருக்க
 சருகுத் திண்ணயக் கூட்டுங்களேன்

16. "கோண கோண மலை" என்பதன் கருத்து யாது?

17. கணக்குப் பிள்ளையின் எழுத்து எவ்வாறானது?

18. சின்னத்துரை உதைத்ததற்கான காரணம் யாது?

19. "உந்தனுக்கு" என்ற சொல்லின் திருத்தமான வடிவம் யாது?

20. "பொன்" என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல் ஒன்றை எழுதுக.

21. மகாசேனன் கட்டுவித்த குளம் யாது?
 1. திசாவாவி 2. கலாவாவி 3. மின்னேரியாக்குளம்
 4. பராக்கிரம சமுத்திரம்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

நேரத்தை வீணாக்கும் போது
கடிகாரத்தின் முள்ளைப் பார்!
ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை!!!!

## குறையிலும் நிறை

குட்டிக் கதை

ஒரு ஏழை ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.



தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. கேலி பொருக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின் வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்" அதன் எஜமானன் கூறினான்.



"பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்"

இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.

- தன் கடமையே முதன்மையானது -

## குழந்தைகளின் உடல் ஆரோக்கியம்

கடந்த வார தொடர்ச்சி ..



இது தவிர இனிப்பு மற்றும் கொழுப்பு அதிகமுள்ள உணவை உண்ணும் பழக்கம் அதிகரித்துள்ளது. அதிக உடல் உழைப்பில்லாத வேலை உடற்பயிற்சியின்மை

முதன்முதலில் குழந்தையின் அளவுக்கதிகமான உடல் எடை க்ணக் கெடுப்பின் போது உணவுப் பழக்கவழக்கங்கள், குடும்ப பழக்கவழக்கங்கள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுகிறது. ஏனெனில் வெற்றிகரமான மருத்துவ முறைகளுக்கு இந்தப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்களும் காரணங்கள்.

உலக அளவில் வேறுபட்ட ஆய்வுகள் நடத்தியதில் உடற்பருமனால் குழந்தைப்பருவத்திலும், வளர்ந்த நிலையிலும் இருதய நோய்கள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

**உடற்பருமனை சீர்செய்ய**


எடையை குறைப்பதை விட எடையை பராமரித்தல் முதல் லட்சியம். இந்த எடை குறைப்பு குறைந்தது 6 மாத காலம் பராமரிக்கப்பட வேண்டும். வெற்றிகரமான எடைகுறைப்பு மற்றும் எடை பராமரிப்புக்கு முக்கியமான வாழ்வு முறை மாற்றம், அதிகப் படியான உடல் உழைப்பு மற்றும் உணவு, உடற் பயிற்சி, செய்முறை மாற்றங்கள், மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் பரிந்துரைக்கப்படுகிறது.

தொடரும்.. ..



Y.ஸப்தனி
தரம் 01C,
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் காணப்படுகின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. பின்வரும் தசம எண்களைப் பின்னங்களாக எழுதுக.
1. 0.8  2. 0.375  3. 12.35  4. 112.125

02. ஒரு மாணவனுக்கு 0.75 மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படுகிறதாயின், 42 மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான துணியின் மொத்த நீளத்தைக் காண்க.

03. பாலனின் வயது, சந்திரனின் வயதிலும் இரு மடங்காகும். இவ்விருவரினதும் வயதுகளின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 500 ஆகும். பாலனின் வயது x எனவும், சந்திரனின் வயது y எனவும் கொண்டு இரு சமன்பாடுகளை அமைக்க. இருவரினதும் வயதுகளைக் காண்க.

03. பசு ஒன்றையும் இரு ஆட்டுக் குட்டிகளையும் ரூ11250 இற்கு வாங்கலாம். அத்தகைய 7 ஆட்டுக் குட்டிகளை வாங்கச் செலவிடும் பணத்திற்கு அத்தகைய பசு ஒன்றை வாங்கலாம்.
1. பசுவின் விலையை ரூx எனவும், ஆட்டுக்குட்டி ஒன்றின் விலையை ரூy எனவும் கொண்டு மேற்குறித்த தகவல்களைப் பயன்படுத்தி இரு ஒருங்கமை சமன்பாடுகளை உருவாக்குக.
2. பசுவின் விலையையும் ஆட்டுக் குட்டி ஒன்றின் விலையையும் காண்க.

04. நாற்பக்கல் ஒன்றின் ஒரு சோடி எதிர்ப் பக்கங்கள் சமனும் சமாந்தரமும் ஆயின், அது ஓர் இணைகரம் ஆகுமென நிறுவுக.

05. ஒரு கிராமத்தைச் சேர்ந்த 40 விவசாயிகளுள் 23 பேர் பூசணியையும், 19 பேர் வெண்டியையும், 9 பேர் இவ்விரண்டையும் பயிர் செய்கின்றனர்.
1. பொருத்தமான வென்வரிப் படம் ஒன்றை வரைக.
2. இவ்விரண்டில் எதையுமே பயிர் செய்யாதோர் எத்தனை பேர்?
3. வெண்டியை மாத்திரம் பயிர் செய்வோர் எத்தனை பேர்?
4. பூசணியை மாத்திரம் பயிர் செய்வோர் எத்தனை பேர்?
5. வெண்டி அல்லது பூசணியை பயிர் செய்வோர் எத்தனை பேர்?

06. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி மடக்கையைக் காண்க.
1. 3.456  2. 684.3  3. 39.32  4. 67.54

07. $3y-9x^2=0$ எனும் சார்பை வரையாமல் பின்வருவனவற்றிற்கு விடை தருக.
1. சமச்சீர் அச்சின் சமன்பாடு  2. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு
3. இழிவு அல்லது உயர்வு பெறுமானம்?
4. இச் சார்பின் பிரதிவிம்பத்தின் இழிவு அல்லது உயர்வுப் பெறுமானம்?

08. கூட்டல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 50, 21 ஆம் உறுப்பு 10 எனின், அவ்விருத்தியின்,
1. பொதுவித்தியாசம்  2. 12ம் உறுப்பு
ஆகியவற்றைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

01. குழந்தைப் பருவத்தில் வயதிற்கு ஏற்ற உயரம் இல்லாத ஒரு பிள்ளைக்கு ஓமோனைத் தொடர்ச்சியாக உட்செலுத்திய போது அது சாதாரண உயரத்துடன் வளர்ந்தது. இந்த ஓமொன்
1. புரோலக்ரின்  2. அதிரீனலின்  3. தைரொட்சின்
4. சோமாற்றோரொபின்

02. இறப்பரை வல்கனைசுப்படுத்தவும் பங்கசு கொல்லியாகவும் பயன்படுத்தப்படும் மூலகம் எது?
1. C  2. N  3. Na  4. S

03. யூரியா $CO(NH_2)_2$ மூலக்கூறு ஒன்றில் காபன், ஒட்சிசன், நைதரசன், ஐதரசன் அணுக்களின் எண்ணிக்கைகள் முறையே.
1. 1, 1, 1, 2 ஆகும்  2. 2, 2, 2, 4 ஆகும்  3. 1, 1, 2, 4 ஆகும்
4. 1, 1, 2, 2 ஆகும்

04. உடனலமுள்ள வளர்ந்த ஒருவரின் குருதியில்உள்ள சிறுமணியற்ற வெண்குழிய வகை எது?
1. இயோசீனாடி 2. மூலநாடி  3. நடுநிலைநாடி  4. மொனோசைற்று

05. பின்வருவனவற்றுள் எது ஈரூடகவாழி (உபயவாழி) விலங்காகும்?
1. நீர்ப்பாம்பு  2. நீர்நாய்  3. தேரை  4. ஆமை

06. பின்வருவனவற்றுள் எது அயன் பிணைப்பை ஏற்படுத்தும் கூட்டமாகும்?
1. NaCl, HCl  2. $CCl_4$, NaCl  3. HCl, $MgCl$  4. NaCl, $MgCl$

07. இரசாயனத் தாக்கங்களில் தாக்க வீதத்தில் பங்களிப்புச் செய்யும் ஒரு காரணி அல்லாதது எது?
1. தாக்கிகளின் பௌதீக நிலை  2. தாக்கிகளின் செறிவு
3. தாக்கிகளின் வெப்பநிலை  4. தாக்கிகளின் நிறம்

08. 1955 ஆம் ஆண்டில் வில்பத்து சரணாலயத்தில் வாழ்ந்த மான்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 550 எனின், அம்மான்களின் கூட்டத்திற்கு வழங்கும் மிகப் பொருத்தமான பெயர் எது?
1. இனம்  2. சூழல் தொகுதி  3. சாகியம்  4. குடித்தொகை

09. இலத்திரன்களை அகற்றுவதன் மூலம் மாத்திரம் விழுமிய வாயு நிலையமைப்பு அடையப்படும் மூலகங்கள் இடம்பெறும் விடை யாது?
1. H, Li, C  2. Na, K, Ca  3. H, F, Cl  4. C, O, N

10. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
1. தைத்தேனியம் ஒட்சைட்டு  2. ஈயகுரோமேற்று
3. குரொமியம் ஒட்சைட்டு  4. காபன்

11. தூண்டல் கிடைக்கப்பெறும் திசையை நோக்கி ஏதேனும் தாவரப்பகுதி வளைகின்றது எனின், அவ்வசைவு?
1. முன்னிலை அசைவு என அழைக்கப்படும்
2. திருப்ப அசைவு என அழைக்கப்படும்
3. உறக்க அசைவு என அழைக்கப்படும்
4. இரசனை அசைவு என அழைக்கப்படும்

## பாடம் : வரலாறு

01. பின்வரும் சாசனங்கள் குறிப்பிடும் விடயங்களைத் தருக.
1. பனாகடுவ செப்புசாசனம் - (1ம் விஜயபாகுவின் – காணிகள் பகிர்ந்தளிப்பு)
2. வல்லிபுர பொற்சாசனம் - (வசபனின்) யாழ்ப்பாணம் ஆட்சிபரம்பல்

02. துட்டகைமுனுவின் 10 தளபதிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விடயங்களை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்கள் எவை?
சிதுல்பவ்வ
சங்கபால விகாரை

03. ஆராமை நிர்வாகம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
மிகிந்தலை  அபயகிரி சமஸ்கிருத  களுதியபொகுண

04. குறுநில மன்னர், பிரதேச ஆட்சியாளர் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
குசேலன்கந்த  ஹென்னன்னேகல  பம்பரகல  யடஹலென

05. ஐந்து அமைச்சர் பரம்பரை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு எது?

06. பின்வரும் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் விடயங்களைத் தருக?
கொடவாய –
பதுளை –
பெரிமியன் குளம் -
சிதுல்பவ்வ –

07. தொல் பொருள் மூலாதாரத்தின் காலத்தை அறிய உதவும் விஞ்ஞான முறை எது?

08. ஆரியரின் தாயகம் எது?
09. ஆரியர் இந்தியாவுக்குள் வந்தவழி எது?
10. ஆரியர் இந்திய வருகை பற்றி குறிப்பிடும் மூலாதாரங்கள் எவை?
11. ஆரியர் அந்தியா வரும் போது நிலவிய நாகரிகம் எது?
12. இந் நாகரிக முக்கிய நகரங்கள் எவை?
13. ஆரியர் முதலில் குடியேறிய பிரதேசம் எது?
14. ஆரிய தாம் கைப்பற்றிய பிரதேசத்திற்கு இட்ட பெயர்?
15. ஆரியர் ஆட்சியில் பலம் பொருந்திய குடியேற்றங்கள் எவை?
16. ஆரியரின் ஆட்சியில் "கண" அல்லது குடியாட்சி நிலவிய இராச்சியங்கள் எவை?
17. 16 குடியேற்றங்களில் பலம் பொருந்திய இராச்சியம் எது?
18. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றால் என்ன?
19. கல்லாயுதங்களும், வானர மனிதனுடைய பற்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

**ஆசிரியர் : அகிலன்**



கடந்த வருடம் HISTORY ACADEMY யில் கல்வி கற்ற 77 மாணவர்களில் 58 மாணவர்கள் A பெறுபேற்றையும், 16 மாணவர்கள் B பெறுபேற்றையும், 03 மாணவர்கள் C பெறுபேற்றையும் பெற்றுத்தந்து எனது கல்வி நிலையத்துக்கு பெருமை சேர்த்தமைக்கு இம் மாணவச் செல்வங்களுக்கு எனது நன்றிகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சர் பதவி....

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தவிசாளரும், மாகாண சபை உறுப்பினருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி நியமிக்கப்படலாமென அரச தரப்பு தகவல்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸில் யாருக்கும் வழங்கலாம் என்பது தொடர்பில் மு.கா. பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திய போதிலும் அப் பேச்சுக்கள் அனைத்தும் எவ்வித இணக்கப்பாடின்றியே நிறைவு பெற்றது.

மு.கா. வின் மாகாண சபை உறுப்பினர்களான அமைச்சர் மன்சூர் ஜெமீல் ஆகியோரின் பெயர்களுடன் அமைச்சர் ஹாபிஸ் நஸீரின் பெயரும் முதலமைச்சர் பதவிக்கு பலமாக அடிக்கப் பட்டபோதும் விட்டுக்கொடுப்பு இன்மையாலும் கட்சியிலுள்ள ஏனையோரின் விருப்பு வெறுப்புக்களினாலும் இந்த முயற்சி தோல்வி கண்டது.

அதன் பின்னர் - மு.கா. வின் செயலாளர் நாயகமும் தேசியப் பட்டியல் எம்.பி.யுமான ஹஸன் அலியை முதலமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்வதென்றும் அதற்குரித்தான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ள ஜனாதிபதியை சந்திப்பதேன்ரம் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது. எனினும் அந்த முயற்சியும் கை கூடவில்லை.

இதனையடுத்தே கட்சியின் பிளவை தடுக்கும் வகையில் முதலமைச்சர் பதவி வேண்டாம் என்ற முடிவுக்கு மு.கா. வந்துள்ளதாக கட்சிப் பிரமுகர்கள் வந்துள்ளதாக சுட்டிக்காட்டினர்.

மு.கா. முதலாமைச்சர் பதவியை ஏற்குமாயின் மு.கா.விடம் தற்போது கைவசமுள்ள இரண்டு மாகாண அமைச்சர்களும் அரசால் பறிக்கப்பட வாய்ப்புள்ளதாம். அதன்படி மன்சூர் வகிக்கும் சுகாதார அமைச்சு, அ.இ.ம.கா.வின் அமீர் அலிக்கும், ஹாபீஸ் நஸீர் வகிக்கும் விவசாய அமைச்சு முதலமைச்சர் பதவியிலிருந்து விலகும் நஜீப் அப்துல் மஜீதுக்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்ததாம்.

இவ்வாறான நிலையில் அடுத்து வரும் இரு வாரங்களுக்குள் கிழக்கு முதலமைச்சர் மாற்றம் தொடர்பில் ஜனாதிபதியால் இறுதித் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப் படவுள்ளது. இதன்போது மு.கா தலைமைக்கு முதலமைச்சர் பதவி வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அ.இ.ம.கா - கிழக்கு முதலமைச்சர் பதவியை - அமீர் அலிக்கு வழங்குமாறு கோரிக்கை விடவுள்ளது. இதற்கு சிலவேளை எதிர்ப்பு தெரிவிக்குமாயின் " அப்படியாயின் கிழக்கு முதலமைச்சர் பதவியை நீங்கள் எடுங்கள்" என்ற தொனியில் அரசு மு.கா.வை அழுத்தமாக கோரும் நிலை ஏற்படும்.

இதனால் பாரிய சங்கடத்தை எதிர்கொள்ளும் மு.கா - வேறு வழியின்றி அ.இ.ம.கா. கிழக்கு முதலமைச்சர் பதவியை ஏற்பதில் விருப்பமின்றி பதவியை ஏற்க ஆதரவு தெரிவிக்க நேரிடுமென மு.கா. முதலைமைச்சர் பதவியை ஏற்பதில் விருப்பமின்றி காணப்படும் மு.கா. பிரதிநிதிகள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எது எப்படியாயிருந்த போதிலும் அமைச்சர் அதா உல்லாஹ் தலைமையிலான தேசிய காங்கிரஸ் முதலமைச்சர் பதவியை ஏற்பதற்கோ அல்லது தற்போதைய முதலமைச்சரான நஜீப் எ மஜீத் அப்பதவியில் தொடர்வதற்கோ மு.கா. கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேவைக்கேற்ப காவல்துறை..

13வது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே கொண்டுவரப்பட்டது. எனினும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

எனினும் பொலிஸ் அதிகாரத்தில் நிர்வாகத்துக்கு முகாமைத்துவத்துக்குத் தேவையான குறிப்பாகப் போக்குவரத்து பொலிஸ் பிரிவு உள்ளிட்டவற்றை வழங்குவதற்குரிய விடயங்கள் குறித்து அரசு சிந்தித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு வரையில் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தேவை இருக்கவில்லை. யுத்தத்தின் பின் வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பெற்ற சுதந்திரத்தின் பின்னர் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரம் ஓரளவு கொடுக்க முடியுமா என்பது பற்றி ஆராயப்படுகிறது.

பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்படமாட்டாது. எனினும் சிலவற்றை வழங்குவது தொடர்பாக அரசு சிந்தித்து வருகின்றது என்றும் அமைச்சர் கெஹெலிய தெரிவித்தார்.

## சம்பூர் மீள்குடியேற்றம்...

குடியேற அம்மக்கள் விருப்பம் தெரிவித்ததாக மூதூர் பிரதேச செயலாளர் நடராசா பிரதீபன் தெரிவித்தார் என இணையச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த 825 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படாத நிலையில் உள்ளனர். இம்மக்கள் வாழ்ந்த பகுதி, அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இடம்பெயர்ந்தவர்களை பல சந்தர்ப்பங்களில் மீளக்குடியமரத்த முனைந்த போதும் அம்முயற்சி கைகூடயிருக்கவில்லை.

இம்மக்கள் தற்போது, வேறு இடங்களில் மீளக்குடியமர விரும்புகின்றார்கள். இந்நிலையில், அவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களுக்கு பொருத்தமான மாற்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர் கூறினார்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இளக்கந்தை, வீரமாநகர் வடக்கு. வேம்படித்தோட்டம், குறவன்வெட்டுவான், தங்கபுரம், சீதனவெளி ஆகிய இடங்கள் மீள்குடியேற்றத்துக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. சீதனவெளியில் ஏற்கனவே 84 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

## கடனட்டை மோசடி...

இருக்குமாறு காவல்துறையினர் பொதுமக்களுக்கு எச்சிரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து கடன் அட்டை தயாரிப்பு இயந்திரம் கடன் அட்டை இலக்கங்கள், போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன

கைதுசெய்யப்பட்டவர்கள் வெள்ளவத்தை, நெல்லியடி. திருகோணமலை போன்ற இடங்களை சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## தீயணைப்புத்துறை...

திருகோணமலை மரத்தடி சுற்றுவட்டச் சந்தியில் 40 வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான நிலையம் செயற்பட்டு வந்தது.

இயந்திரங்கள் பழுதடைந்தமை மற்றும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமைகள் காரணமாக இந்நிலையம் செயற்பட முடியாத நிலைமை காணப்பட்டு இருந்தது.

முன்நாள் நகர சபை தலைவர் ச.கௌரிமுகுந்தன் எடுத்த முயற்சி காரணமாக நெதர்லாந்து அரசு இப்பிரிவை மீளவும் அமைப்பதற்கான நிதி உதவியினை வழங்கி இருந்தது.

ஆரம்ப வைபவத்தின் போது தீ அணைப்பு வீரர்களினால் கண்காட்சி ஒன்றும் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டது. (கதிரவன்)

## 285 பேருக்கு டெங்கு...

எனவே, டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மாவட்டம் முழுவதும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் டெங்கு பெருக்கத்துக்கான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் இது விடயத்தில் விழிப்புடன் உதவவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## எழிலனன் வழக்கு...

2009ஆம் ஆண்டில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்த குறித்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. மேற்படி வழக்கு இன்று (05) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணி, மன்றிற்கு சமூகமளிக்கவில்லை. இதனால் குறித்த வழக்கினை ஜூலை 21 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

இது தொடர்பாக வடமாகாண சபை அனந்தி சசிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்னர் நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணி ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியாகச் சென்றமையினால் குறித்த வழக்கு இழுபறி நிலையில் இருந்து வந்தது.

தொடர்ந்து பிறிதொரு அரச சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் மூலம் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி வழக்கு இடம்பெற்றது.

இருந்தும் இன்று (05) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது [illegible] தரவில்லை. இதனால் இந்த வழக்கு இழுபறி நிலையில் இருந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீள்குடியோரின் கழிவு...

அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இந்நிதி செலவிடப்படவுள்ளது.

மீளக் குடியேறிய 226,236 குடும்பங்களில் 49,504 குடும்பங்கள் போதுமான கழிவகற்றல் வசதிகளின்றியே மீளக் குடியேறியுள்ளதாக அவ்வமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 114 மில்லியன் ரூபாய்களில் 1,673 கழிவகற்றல் வசதிகள் இவ்விரு மாகாணங்களிலும் அமைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நூற்றுக்கணக்கான ஏக்கர்...

முடுக்கியுள்ளனர் என அங்கிருந்த மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்..

மேன்கமத்திலுள்ள விவசாயச் சம்மேளத்திற்குச் சொந்தமானதும் குடியேற்றங்கள் நடைபெறுவதற்றுத் தடுக்கப்பட்டதும், நீரைக் காத்துவைக்கும் பிரதேசத்திற்காக ஒதுக்கப்பட்டதுமான பலநூறு ஏக்கர் காணிகளைப் பங்குபோட்டுக்கொள்ள மேற்படி முயற்சி நடந்துள்ளது.

குறித்த இடத்திற்கு புல்டோசர்கள் சகிதம் வருகை தந்தவர்களின் நடவடிக்கையில் சந்தேகங்கொண்ட மக்கள் அங்கு குழுமியதுடன் அபிராமி விவசாயச் சம்மேளனத் தலைவர் அவ்விடத்திற்கு உடனடியாக வருகை தந்துள்ளார். அதனைத் தொடர்ந்து உரிய பிரதேசத்தில் சிவில் பாதுகாப்புக் குழுத்தலைவர் மற்றும் அப் பிரதேசத்தின் கிராமசேவையாளர் ஆகியோரின் கவனத்திற்கு இவ்விடயம் நகர்த்தப்பட்டுள்ளது. அவ்விருவரூடாகவும் இவ்வத்துமீறல் நடவடிக்கை மூதூர் பிரதேசச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

மூதூர் பிரதேசச் செயலரின் பணிப்புரைக்கு அமைய காவல்துறையின் உதவியுடன் காணிக்கபளீகர நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

## கொல்லப்பட்ட காவல்துறை...

சரணடைந்த காவல்துறையினர் அனைவரையும் விடுதலைப் புலிகளின் தலைவரின் வழிகாட்டுதலுக்கு அமைய விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளரான கிட்டு அம்மானே இக் கொலைகளைப் புரிந்ததாக தற்போதைய பிரதி மீள்குடியேற்ற அமைச்சரும் அப்போதைய விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியுமான முரளீதரன் தெரிவித்திருந்ததாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

## முதலாவது கூத்து...

பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி. கிட்ணம் கோவிந்தராஜா, கௌரவ விருந்தினராக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி க.பிறேமகுமார், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சி. மௌனகுரு உட்பட பார்வையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் போது கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி. கிட்ணம் கோவிந்தராஜா, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி க.பிறேமகுமார், பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் நாடாவை வெட்டி இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

இக்கண்காட்சியானது வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் நடைபெறும் எனவும், இதனை பார்வையிடுவதற்கு அனைவரும் வருகை தந்து இக்கண்காட்சியை பார்வையிடுமாறு கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் தற்காலிக விரிவுரையாளரும், ஓவியருமான வே.ஹோகுலரமணன் கேட்டுக் கொண்டுள்ளார். ஓவியர் வே.ஹோகுலரமணனின் தனி முயற்சியில் இக் கண்காட்சி நடைபெற்றது. இவர் இதற்கு முதல் பல ஓவியக் கண்காட்சிகளை லண்டன், கொழும்பு, மட்டக்களப்பு போன்ற இடங்களில் பல ஓவியர்களுடன் இணைந்து நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீன் வளர்ப்புத்திட்டத்தை...

தொடர்பு கொண்டு இத்திட்டம் தொடர்பாகவும் இதனால் ஏற்படப்போகும் பின்விளைவுகள் பற்றியும் எடுத்துக் கொண்டதற்கு இணங்க அவர் அதனை ஏற்றுக்கொண்டு உடனடியாக எழுத்து மூலம் தரும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்ததாகவும் பிரதேச செயலாளருக்கும் இதுதொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவரும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதாகவும் கூறினார்.

இத்திட்டமானது மக்கள் நலன்சார்ந்த திட்டமாக இருப்பதன் காரணமாக இத்திட்டத்தினை வேறு ஒரு இடத்திற்கு மாற்றி மக்கள் நலனில் அக்கறை காட்டுமாறு உரிய அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டார்.


உண்மையை உலகுக்குச்
சொல்லக் கூடிய
பத்திரிகையாளர்கள்
தேவை - 075 4252042




## பரா அத் இரவு என்பது!!!

நபி(ஸல்) அவர்கள் சில அவசியமான நோக்கத்திற்காகவே இவ்வாறு அறிவுருத்தியுள்ளார்கள். ரமளான் மாதத்திற்கான ஒரு பயிற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஷ.்பான் மாதத்தின் ஆரம்ப நாட்களில் நோன்பு நோற்க ஆர்வப்படுத்தியுள்ளார்கள்.

ரஜப் புனித மாதத்தைத் தொடர்ந்து மக்கள் ரமளான் மாதத்தை மாத்திரமே எதிர்நோக்குவதால் ஷ.்பான் மாதத்தின் முக்கியத்துவத்தை கூறினார்கள். ரமளான் மாதத்தை எல்லா வகையிலும் எதிர்நோக்க வேண்டும். அதற்காக தயார் ஆகவேண்டும் . ஷ.்பான் மாதத்தின் பிந்தைய பாதி



நாட்களில் நோன்பு நோற்க தடைவிதித்தார்கள். (இது வாராந்திர திங்கள் மற்றும் வியாழக்கிழமையில் சுன்னத்தான் நோன்பை நோற்பவர்களுக்கோ, மாதத்தின் நடு மூன்று நோன்பை நோற்பவர்களுக்கோ, நேர்ச்சை செய்து நோற்பவர்களுக்கோ பொருந்தாது)

இவ்வாறு இல்லாமல் அல்லாஹ் 'லைலதுல் கத்ர்' சம்பந்தமாக சொல்யுள்ள செய்திகளை மற்றும் வசனங்களை கொண்டுவந்து இந்த ஷ.்பான் மாதத்தின் 15ம் இரவோடு இணைத்து இந்த நாள்தான் லைலதுல் கத்ர் என்றோ அல்லது அதற்கு நிகரானதுபோன்றோ வாதிடுவது அப்பட்டமான அபத்தம்.

தொடரும் .. ..





## இஞ்சிப் பொங்கல்

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - 2 டம்ளர், பாசிப் பருப்பு - 1 டம்ளர், இஞ்சி துருவியது - 1 கப், உப்பு - தேவையான அளவு, மிளகு - 2 மே.கரண்டி, சீரகம் - 2 மே.கரண்டி, பெருங்காயப் பொடி - 2 தே.கரண்டி, கறிவேப்பிலை – சிறிதளவு, நெய் - 100 கிராம்,

**செய்முறை**

குக்கரில் பச்சரிசி, பாசிப்பருப்பு, துருவிய இஞ்சி, பெருங்காயத் தூள், உப்பு, தண்ணீர் 5 டம்ளர் சேர்த்து மூடி போட்டு கொதிக்க விடவேண்டும். தாச்சியில் நெய், எண்ணெய் சேர்த்து காய்ந்ததும், முந்திரி மற்றும் மிளகு சீரகப் பொடி போட்டு வறுத்தெடுத்து கறிவேப்பிலையை கடைசியாகச் சேர்க்கவும். பின்னர் வறுத்த தூளை பொங்கலுடன் கலந்து கொதிக்க வைத்தால் பத்தே நிமிடத்தில் இஞ்சி பொங்கல் ரெடி.

## இயற்கை அழகைப் பெற



அழகுக்கு செயற்கையான வழிகளை மேற்கொள்வதை விட இயற்கை வழிகளே நீடித்து நிற்கும். மேலும் எந்த பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது, அழகின் மேல் அக்கறை கொள்ளும் பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுவது சரும வறட்சியால் தான். இந்த சரும வறட்சியானது குளிர் காலத்தில் மட்டுமின்றி, கோடைக்காலத்திலும் சந்திக்கக்கூடும்.

கோடையில் உடலில் உள்ள நீர்ச்சத்தின் அளவு குறைவதால், உடல் வறட்சியடைவதுடன், சருமத்தையும் வறட்சி அடையச் செய்கிறது.

அவகோடா

அதிகமாக எண்ணெய் வழியாமல் இருக்கவும், சூரியக்கதிர்களில் இருந்து பாதுகாப்பு தரவும், எண்ணெய் பசை சருமத்திற்கு ஏற்றவாறான பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

தொடரும் .. ..

சம்பூர் சதீஸின்

# கொட்டியாபுரத்து சிங்கம்

... பாகம் 01 ...

**வரலாற்றுக் குறுநாவல்**

வில்லுக் குளத்தின் பூதக் கல்லில் இருந்தவாறு சிந்தனையிலீடுபட்டுக் கொண்டிருந்த இளஞ்சிங்கனுக்கு நெஞ்சம் முழுவதும் நேற்றைய தினம் வன்னியனாரின் அரண்மனையில் நிகழ்ந்த நிகழ்வுகளே நிறைந்திருந்தன. இதற்கு முன்னரும் பல தடவைகள் அவன் சம்பூருக்கு



வந்ததுண்டு. அப்போதெல்லாம் தன் அன்புத் தோழன் சத்யனுடனேயே இவ்விடத்துக்கு வந்தது வில்லுக்குளத்தின் அழகிலும் அமைதியிலும் தங்களை மறந்து நாட்டு நடப்புகள் அடங்கலான பல விடயங்கள் பற்றிப் பேசுவது வழமையான நிகழ்வுகள்.

ஆனால் இன்றைய தினம் வில்லுக்குளம் அவனது கண்களுக்கு அமைதியாகவுமில்லை அழகாகவுமில்லை. குளத்திலிருந்து வரும் இளந்தென்றல் கூட அவன் தனிமைக்கு மகிழ்வானதாக அமையவில்லை. நிறைந்த நீரில் நாரைகளின் நேரிய தலக்கோலமோ, வெண்டாமரையின் நறுமணமோ, சில்லுத் தாராவின் சிலுசிலுப்புகளோ தென்படாது, கோடை வெயில் பார்பிரித்து உல்லித்தேங்காய் போல நிலம் வரண்டு காணப்பட்டது.

இந்த நிலையிலும் தன்னந்தனியாக நெடுந்தூரமிருந்து வந்தும் தனது சிறிய மாமனின் மாளிகைக்குச் செல்லாமல் அவருக்கும் கூடத்தெரிவிக்காமல் தனிமையை நாடி பூதக்கல்லுக்கு நடையிட்ட இளஞ்சிங்கனொன்றும் வலிமைமிக்க வாலிபனல்ல, பாலகனே.

தனக்குக் காவலாய் தன்னுடன் வந்திருந்த காவலர்களை மாமனின் மாளிகைக்கு அனுப்பி விட்டு, மறுதிசையில் திரும்பியவனைப் பார்த்த காவலர்கள் இளவரசே! என்றழைத்து தலைவணங்கி நின்றனர். "நீங்கள் செல்லுங்கள் நான் இன்னும் சிறிது நேரத்தின் பின் வருகின்றேன்" என்று கூறி பதிலுக்குக்



கூட காத்திராமல் அவ்விடத்தை விட்டகன்றான்.

காவலர்கள் அடிக்கடி இங்கு வருபவர்களாதலால் அவர்களுக்கு இப்பிதேசத்தின் நிலை நன்றாகத் தெரியும். வெற்றிமாறனின் ஒற்றர்கள் இங்குள்ள சந்து பொந்துகளிலெல்லாம் இருப்பார்கள் என்றும், இவ்வூர்மக்கள் இளவரசன் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்கள் என்றும் அறிந்தவர்களாதலால் வாடிய முகத்தில் தேடிய புன்னகையை உதிர்த்து விட்டுச் செல்லும் இளஞ்சிங்கனை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு தங்கள் வருகையைத் தெரியப்படுத்த வெற்றிமாறன் மாளிகையை நோக்கி நடந்தனர்.

மாளிகையின் படலையினுள் பிரவேசித்த காவலர்களை உப்பரிகையிலிருந்து அவதானித்த வெற்றிமாறனுக்கு அவர்களணிந்த உடையைக் கொண்டு அவர்கள் மேன்காமத்து வன்னியனாரின் படைவீர்கள் என ஊகித்தறிந்து அவர்களை நோக்கி வரலானான். அண்மித்ததும் காவலர்கள் தலைதாழ்த்தி வணக்கம் கூறி தாங்கள் கொண்டு வந்த செய்திமடலைக் கொடுத்ததோடு இளவரசன் செல்லுமிடத்தையும் கூறினர்.

அவர்களை அனுப்பிவிட்டு செய்தியைப் படிக்கலானான்.

தம்பி வெற்றிமாறனுக்கு,

இங்கு தற்போது சூழ்நிலை மகிழ்வுக்குரியதாக இல்லை. ஆதலால் இளஞ்சிங்கன் சிறிது காலம் உன் பொறுப்பில் இருக்கட்டும்.

இப்படிக்கு

வன்னிமை

மடலை இடையில் செருகிய வெற்றிமாறன், தனது குதிரையை அழைத்து வர ஆளனுப்பினான். வந்த குதிரையில் தாவியேறியவன் மருதனை வரச்சொல்லி ஆளனுப்பி விட்டு குதிரையைத்தட்டி விட்டான்.

... பாகம் 02 தொடரும் ...




# குருப் பெயர்ச்சி (13.06.2014 - 05.07.2015)

***குரு பகவான் வரும் ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 மாலை 06.03 மணிக்கு மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு மாறுதலாக உள்ளார். 05.07.2015 வரை கடக ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். குரு பகவான் கடக ராசியில் சஞ்சரிக்கவுள்ளதால் 12 ராசிகளுக்கும் உண்டாக்கக் கூடிய பலா பலன்கள். இவை பொதுவான பலன்களே!***




## கும்பம்

எந்தப் பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து நியாயமாக தீர்த்து வைக்கும் அறிவாற்றல் கொண்ட உங்களுக்கு அவ்வளவு சாதகமான அமைப்பென்று கூறமுடியாது. தேவையற்ற மறைமுக எதிர்ப்புக்கள் வீண் வம்பு வழக்குகளை எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார நிலை ஓரளவுக்கு சிறப்பானதாக இருக்கும். சுப காரியங்களில் தடைகள் ஏற்பட்டு பின் உங்கள் முயற்சியின் பயனாக வெற்றி கிட்டும். அசையும் அசையாத சொத்துக்கள் வாங்குவதால் நன்மை விளையும். உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புக்கள் ஏற்படலாம். தொழில் வியாபாரம் சுமூகமாக நடைபெறும். புதிய நண்பர்களால் மனசஞ்சலம் ஏற்படும்.

உடன் பணிபுரிபவர்களை கொஞ்சம் அனுசரித்து நடப்பது சிறந்தது. கல்வியில் சற்று மந்த நிலை ஏற்பட வாய்ப்புண்டு. டிசம்பர் மாதம் சற்று நன்மை பயக்கக் கூடிய காலமாகும். இக்காலத்தினுள் சுப காரியங்கள் நடைபெற வாய்ப்புண்டு. பிறர் செய்யும் தவறுகளுக்கும் நீங்கள் பொறுப்புக் கூற வேண்டி ஏற்படலாம். அதிர்ஷ்ட நிறங்கள் வெள்ளை, நீலம்.




## மீனம்

எல்லோர்க்கும் எல்லா சமயங்களிலும் உதவி கரமாக திகழ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட உங்களுக்கு மிக மிக அற்புதமான ஓர் அமைப்பாகும். பண வரவுகளுக்கு பஞ்சம் ஏற்படாது. நீங்கள் நினைத்தவைகள் நிறைவேறும். தடைப்பட்ட திருமண சுப நிகழ்வுகளின் தடை விலகி கை கூடும். சொந்தமாக கார், வீடு வாங்கும் யோகம் உண்டாகும். பூர்வீக சொத்துக்களால் நன்மை உண்டாகும். கடன்கள் குறையும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. குடும்பத்தில் சுபீட்சமான நிலை உருவாகும். பெரிய தொகைகளை பிறருக்கு கடனாக கொடுக்கும் போது சற்று சிந்தித்து செயல்படுதல் அவசியம்.

தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபம் பெருகும். நவீன கருவிகள் வாங்க அரசு வழியில் கடனுதவிகள் கிடைக்கும். செய்யும் தொழிலில் உயர்வான பதவிகள் கிட்டும். வெளிநாட்டுக்குச் சென்று வேலை செய்யும் யோகம் உண்டு. கல்வியில் நல்ல முன்னேற்றமான நிலையிருக்கும். லாட்டரி போன்றவற்றாலும் அதிக இலாபங்களைப் பெற முடியும். ஆகஸ்ட் - டிசம்பர் வரையான காலம் அற்புதமாகக் காணப்படும். அதிர்ஷ்ட நிறங்கள் மஞ்சள், சிவப்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## இரட்டை வெற்றிக் களிப்பில் கைலேஸ்வரா

பாடசாலைகளிற்கிடையிலான நல்லுறவை மாணவர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக அணிக்கு 20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியினை தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியும், சாம்பல்தீவு மாகா வித்தியாலயமும் இணைந்து கடந்த நான்கு வருடங்களாக நடாத்தி வருகின்றன.

இவ்வருட வெற்றிக்கான சமர் கடந்த 25.05.2014 அன்று இடம்பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி அபாரமாக விளையாடி 180 ஓட்டங்கள் எனும் இலக்கினை நிர்ணயித்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாம்பல்தீவு மாகாவித்தியாலயம் 92 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையுமிழந்தது. இதனால் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி வெற்றியீட்டி நான்காவது வருடமும் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது. ஆட்டநாயகனாக நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியின் மாணவன் வி.டனுஷன் (51) தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வருடம் 2014ம் ஆண்டு தொடக்கம் செயற்படும் வண்ணம் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் முத்துக்களுக்கான சமர் எனும் பெயரில் நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரிக்கும் செல்வநாயபுரம் இந்து மகாவித்தியாலயத்திற்கும் இடையில் கடந்த 31.05.2014 அன்று நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது இப்போட்டியில் நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி அணி 11-05 என்ற அடிப்படையில் 06 புள்ளிகள் முன்னணி பெற்று கிண்ணத்தைச் சுவிகரித்துக் கொண்டது. இப்போட்டியின் சிறந்த வீராங்கனையாக நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியின் மாணவி T.K.இ.பானா தெரிவு செய்யப்பட்டார். இந்நிழ்வில் பாடசாலையின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியை அமரர் திருமதி.வி.செல்வராஜா அவர்களும் நினைவுகூரப்பட்டார்.





## வருடாந்த கிரிக்கட் போட்டி

திருகோணமலை தல வைத்தியசாலையினால் நடாத்தப்படும் கிரிக்கெட் போட்டியின் 5வது வருடப் போட்டி கடந்த 24.05.2014 சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டிகளில் பங்குபற்றிய நான்கு அணிகளுள் இறுதிப்போட்டியில் கிண்ணியா மற்றும் திருமலை நகர வைத்தியசாலை அணிகள் மோதின. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருமலை நகர வைத்தியசாலை அணியினர் 10 ஓவர்களுக்கு 139 ஓட்டங்களைப் பெற்றனர். 140 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிண்ணியா அணியினர் வெறும் 85 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

54 ஓட்டங்களால் வெற்றி பெற்ற திருமலை வைத்தியசாலைசாலை அணியினர் கோப்பையைக் கைப்பற்றினர். இப்போட்டியில் 60 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்த திருமலை ஹர்சாத் சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டார்.



## கல்முனையும் மருதமுனையும் மோதுகின்றன.



கல்முனை லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன். அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனம், அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையே கடந்த ஒரு மாத காலமாக நடாத்திவந்த நொக் அவுட் அடிப்படையிலான மர்ஹூம் ஏ.எம். தௌபீக் ஞாபகார்த்த அழைப்பு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பதினொரு கழகங்கள் பங்குபற்றிய மேற்படி சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு, கல்முனை பிரிலியன்ட் கழகமும், மருதமுனை ஈஸ்ரன் யூத் வி. கழகமும் தெரிவாகி யுள்ளன.

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும், கல்முனை மாநகரசபை உறுப்பினரும் சிரேட் சட்டத்தரணியுமான ஏ. எம். றகீப் தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி இறுதிப் போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். ஹரிஸ் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் கௌரவ அதிதியாகவும், கல்முனைத் தொகுதியின் ஸ்ரீல. சு. கட்சியின் அமைப்பாளரும், கல்முனை மாநகர சபையின் உறுப்பினருமான ஏ. எம். றியாஸ் விசேட அதிதியாகவும், கலந்து சிறப்பித்தனர்.

# சர்வதேசச் செய்திகள்

## நீதிபதியின் மீதே வல்லுறவு

உத்தர பிரதேசத்தில் பெண் நீதிபதி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் பதாவ்னில் சகோதரிகள் இருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, மரத்தில் தொங்கவிடப்பட்ட சம்பவத்திற்கு உள்நாட்டுத் தலைவர்கள் மட்டுமின்றி ஐ.நா.வும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், உத்தரப் பிரதேசம் அலிகர் பகுதியில் பெண் நீதிபதி ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ய முயற்சி நடந்துள்ளது.

உடல் முழுவதும் காயங்களுடன் தனது அதிகாரப்பூர்வ இல்லத்தில் மயங்கிய நிலையில் அவர் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

விசமிகள் அவரை பலாத்காரம் செய்து அவருக்கு வலுக்கட்டாயமாக பூச்சி மருந்து கொடுத்திருப்பார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நீதிபதியின் நிலைமை மோசமாக உள்ளது.

## அணுக்கதிர் நீரைத்தடுக்கப் பனிக்கட்டிச் சுவர்

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட, ஜப்பானின் புகுஷிமா அணு உலையின் அணுக்கதிர்வீச்சு நீர், நிலங்களில் ஊடுருவாமல் தடுக்க தடுப்பு சுவர் ஒன்று கட்டப்படுகிறது.

1.5 கிலோமீற்றருக்கு, தரைமட்டத்திற்கு கீழே பனிக்கட்டியால் இந்த சுவர் எழுப்பப்படுவதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த, 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானின் சென்டாய் பகுதியில் ஆழிப்பேரலை ஏற்பட்டது.

இதன் காரணமாக புகுஷிமா என்ற இடத்தில் இருந்த அணு உலை பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த அணு உலையில் உள்ள அணுக்கழிவு நீர் அண்டை நிலத்துடன் சேராமல் இருப்பதை தடுக்கும் பொருட்டே இந்த பனிக்கட்டி சுவர் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்ஸ்டாகிராமின் தடையால் டிவிட்டரில் அதிகரித்தது அரைநிர்வாணப் படங்கள்

இணையத்தில் படங்களைப் இலகுவாகப் பகிரவென உருவாக்கப்பட்ட இன்டாகிராம் என்னும் தளத்தின் இயக்குனர் அத்தளத்தில் அரை நிர்வாணப் பெண்களின் படத்தைப் பகிர்வதற்குத் தடை விதித்ததை அடுத்து பயன்பாட்டாளர்களின் கடுமையான விமர்சனங்களுக்கு அத்தளம் ஆளாகியுள்ளது. பிரபல பாடகி ரிஹானா, தனது இன்ஸ்டாகிராம் பக்கங்களில், தான் தன்னைத்தானே எடுத்துப் பிரசுரித்திருந்த இது போன்ற புகைப்படங்களை இந்த நிறுவனம் அகற்றிவிட்டதை அடுத்து, இன்ஸ்டாகிராமில் தன்னுடைய பக்கக் கணக்கையே அவர் அகற்றிவிட்டார்.

இந்த பிரச்சினையை அடுத்து பல பெண்கள், இன்ஸ்டாகிராமுக்குப் போட்டி இணையத் தளமான, ட்விட்டரில், தங்களது மேல் பாதி நிர்வாணப் படங்களை பிரசுரித்திருக்கின்றனர்.

ட்விட்டர் நிறுவனம் இந்த நிர்வாணப் படங்கள் பிரச்சினையில் இது போன்ற கடும் போக்கைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இன்ஸ்டாகிராமின் இணை நிறுவனரான கெவின் சிஸ்ட்ரோம், இந்தத் தளத்தை பயன்படுத்தும் பதின்ம வயதினர் உட்பட, அனைத்துப் பயன்பாட்டாளர்களுக்கும் நியாயமான விதிமுறைகள் வேண்டும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## வீட்டின் மீது விழுந்த ஜெட் விமானம்

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் 1 வயது சிறுவன் Christopher Garcia என்பவன் தன்னுடை வீட்டில் டிவி பார்த்துக்கொண்டு இருந்தபோது திடீரெ பூகம்பம் ஏற்பட்டது போன்ற பெரிய நடுக்கம் ஏற்பட்டை உணர்ந்தான்.

எதிர்வீட்டில், சுமார் 200 அடிதூரத்தில் ஜெட் விமான ஒன்று வீட்டின் மேல் விழுந்து நொறுங்கி தீப்பிடித்து எரிந்ததை பார்த்தான்.

உடனடியாக மீட்புப்படையினர்களுக்கு அந்த சிறுவ தகவல் கொடுக்கவே,விரைந்து வந்த மீட்புப்படையின தீப்பிடித்து எரியும் வீட்டை தீவிர முயற்சிக்கு பிற அணைத்தனர். ஜெட் பைலட் கடைசி நேரத்தில் பாராசூ பயன்படுத்தி ஜெட் விமானத்தில் இருந்து கீழே குதித்ததா அவருக்கு சிறிய அளவில் காயம் மட்டுமே ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் நல்லவேளையாக அந்த இரண் வீடுகளில் உள்ளவர்கள் சம்பவ நேரத்தில் யாரு இல்லாததால் எவ்வித உயிரிழப்பும் இல்லையென்ப குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கொல்லப்பட்ட காவல்துறையினர் தொடர்பாக விசாரணை வேண்டும்"



அப்போதைய காவல்துறை மா அதிபரின் கட்டளைக்கு இணங்க 1990ம் ஆண்டு யூன் மாதம் கிழக்கில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த 600 காவல்துறையினர் தொடர்பாக விசாரணைகளை நடாத்த வேண்டும் என அரசிடம் கோரிக்கையொன்று முன்வைக்கப் பட்டுள்ளது.

1990ம் ஆண்டு ஜுன் மாதம் 11ம் திகதி திருக்கோயில் காட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் 600 சரணடைந்த காவல்துறை உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடாத்துமாறு ஓய்வு பெற்ற காவல்துறை உத்தியோகத்தர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. குறித்த காவல்துறை உத்தியோகத்தர்களை சரணடையுமாறு அப்போது காவல்துறை மா அதிபராக பதவி வகித்தவர் உத்தரவிட்டதாகவும் எனினும் இவ்விடயம் பற்றிய தகவல்கள் மூடிமறைக்கப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது. 13

## 285 பேருக்கு டெங்கு - 2 பேர் பலி



திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களில் 385பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளானதுடன் இருவர் உயிரிழந்துள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அனுஷியா ராஜ் மோகன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது :-

கடந்த மே மாதத்தில் மாத்திரம் 9 பேர் இந்நோயின் தாக்கத்துக்கு ஆட்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேர் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். இருவர் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா பிரதேசத்தில் இந்த நோயின் கடுமை காரணமாக ஒருவர் மார்ச் மாதத்திலும் மற்றொருவர் மே மாதத்திலும் மரணமாகியுள்ளனர். 13

## எழிலனின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு



2009ஆம் ஆண்டு இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோரான விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட ஐந்து பேர் தொடர்பான வழக்கினை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ம.ஆனந்தராஜா, ஜுலை மாதம் 21ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர் தொடர்பாக அவர்களின் குடும்ப உறுப்பினர்களான கிருஸ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, அனந்தி சசிதரன், கந்தசாமி பொன்னம்மா ஆகியோரினால்...... 13


## 100 மில்லியன் வரிநிலுவையை அறவிட மட்டு மாநகரசபை நடவடிக்கை




மட்டக்களப்பு மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவையாக உள்ள 100 மில்லியன் ரூபா வரிப்பாக்கியை அறவிட்டுக் கொள்ள இம்மாதம் முழுவதும் விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதன்படி இவ்வாரத்தில் வரி தொடர்பான அறிவூட்டல் செயற்பாடுகளும் வரி நிலுவை அறவீட்டுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

## "முதலாவது கூத்து" கூத்தோவியக் கண்காட்சி ஆரம்பம்





கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் தற்காலிக விரிவுரையாளரும், ஓவியருமான வே.ஹோகுலரமணனின் முதலாவது கூத்து எனும் தனி ஓவியக் கண்காட்சியின் முதலாவது நாள் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இன்று நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்குப் 13

## திருச்சபையின் ஒரே தமிழ்க் கர்தினால் சாவு



வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க திருசபையில் கர்தினால் பதவி வகித்த ஒரேயொரு தமிழ் பாதிரியாரான துரைசாமி சைமன் லூர்துசாமி காலமானார்.

நோய்வாய் பட்டிருந்த நிலையில் கடந்த 2ம் திகதி அவர் காலமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1934ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி தமிழ் நாட்டின் செஞ்சியில் உள்ள கல்லேரி பகுதியில் பிறந்த அவர், 1985ம் ஆண்டு கர்தினால் பட்டம் வழங்கப்பட்டதுடன், றோமில் பதவி வகிக்க ஆரம்பித்தார்.

நாளையதினம் அவருக்கு பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆராதனை செய்ததன் பின்னர், நாளை மறுதினம் அவரது உடல் புதுவைக்கு எடுத்துவரப்பட்டு, அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேவைக்கேற்பக் காவல்துறை அதிகாரம் மாகாணசபைக்குக் கிடைக்குமா?




தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத, மாகாண சபைகளின் நிர்வாக முகாமைத்துவதற்கு தேவையான காவல்துறை அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசாங்கம் சிந்திப்பதாக அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல 5ம் திகதி தெரிவித்துள்ளார்.

காவல்துறை அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்குவதில்லை என்பதை அரசாங்கம் கொள்கையளவில் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. எனினும் பெற்றுள்ள சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள தேவைக்கேற்ப மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் கெஹெலிய தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 13

விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்
அழைபேசி - 075-2954733

## மீன்வளர்ப்புத் திட்டத்தை இடம்மாற்றுங்கள் அரியம் எம்.பி கோரிக்கை

13

மட்டக்களப்பு கடுக்காமுனை குளத்திற்கருகில் மீன்குஞ்சு வளர்ப்புத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அத்திட்டமானது, இந்துக்களின் கலாசாரத்திற்கு முரணான வகையில் ஆலயங்களுக்கு அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதனால், உடனடியாக அதனைத் தடை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இத்தடைக் கோரிக்கை தொடர்பாக கருத்தறிவித்த அரியம் எம்பி. நெற்கட்டியடி ஸ்ரீ விக்கினேஸ்வரன், மாரியம்மன் ஆலயங்கள் இரண்டும் இத்திட்டத்திற்கு அருகாமையில் இருப்பதன் காரணமாக இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனை உடனடியாக தடை செய்யுமாறு இப்பிரதேசத்தில் உள்ள 10 பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸுடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org